Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 99

சனிக்கிழமை
05 மார்ச் 2022

மாசி 21 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16

விலை: 30/=

**தடுப்பூசி**
நேற்று 26,028

**உயிரிழப்பு**
நேற்று 20
மொத்தம் 16,307



"அப்ப விழுந்தும் மீசையில மண்பட லை எண்டுறார் போல. உவரை வாயில் லாட்டி நாய் கொண்டு போயிருக்கும் கண்டியளோ...!

# குடும்ப அழுத்தத்தாலேயே பறிக்கப்பட்டது பதவி!

## விமல் வீரவன்ஸ சாட்டை



கொழும்பு, மார்ச் 5

'குடும்ப அழுத்தத்துக்கு பணிந்தே ஜனாதிபதி எம்மை பதவி நீக்கியுள்ளார். நாம் மக்கள் வழங்கிய ஆணையின் பிரகாரமே செயற்பட்டுள்ளோம். எனவே, பதவிகள் பறிக்கப்பட்டதால் கவலை அடையவில்லை' என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரான அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார். 15

## ஏழரை நான்கானது

யாழ்ப்பாணம், மார்ச் 5

நாடளாவிய ரீதியில் இன்று நான்கு மணிநேர மின் வெட்டு நடை 15

## யுகதனவிக்கு எதிரான மனுக்கள் நிராகரிப்பு!

கொழும்பு, மார்ச் 5

கெரவலப்பிட்டிய யுகதனவி மின்னுற்பத்திநிலையத்தின் பங்குகளை, அமெரிக்க நிறுவனத்துக்கு 15

## ரயிலில் பாய்ந்து இளைஞன் சாவு

யாழ்ப்பாணம், மார்ச் 5

யாழில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த கடுகதி ரயிலில் பாய்ந்து இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார். அரியாலை 15

விமல், கம்மன்பிலவுக்கு ஆதரவாக

## அமைச்சரவையை புறக்கணிப்பேன்!

வாசுதேவ நாணயக்கார திட்டவட்டம்
அரசுக்குள் மோதல் உச்சம்

கொழும்பு, மார்ச் 5

விமல் வீரவன்ச, உதய கம்மன்பில ஆகிய இருவருக்கும் நீதி கிடைக்கும் வரை அமைச்சரவைக் கூட்டங்களில் பங்கேற்க மாட்டேன். அமைச்சுப் பணிகளையும் முன்னெடுக்க மாட்டேன். அதே போல எமது அணி எதிரணியுடன் இணையாது என்று ஜன 15

இந்திய மீனவர்களின் அத்துமீறல்

## நீதிமன்றத் தலையீட்டை கோரியது மீனவ சமூகம்

யாழ்ப்பாணம், மார்ச் 5

இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையைத் தடைசெய்யும் வகை 15

## 28,300 மெ.தொன் டீசல் வந்தடைவு!

கொழும்பு, மார்ச் 5

நாடெங்கிலும் எரிபொருள் தட்டுப்பாடு பூதாகரமாகியுள்ள நிலையில், 28 ஆயிரத்து 10

## பிரதமர் அலுவலகத்தை வைத்து அரசியல் செய்கிறாராம் கீதநாத்!

அங்கஜன் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 5

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில், பிரதமரின் இணைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள கீதநாத், பிரதமர் அலுவலகத்தை வைத்து அரசியல் செய்கின்றார் என்று தெரிவித்துள்ளார் யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலை 15

## எரிபொருள், மின்கட்டணத்தை உடனடியாக அதிகரிக்குக!

இலங்கை மத்திய வங்கி அரசாங்கத்துக்கு பரிந்துரை

கொழும்பு, மார்ச் 5

உடன் அமுலாகும் வகையில் எரிபொருள் விலைகள் மற்றும் மின்சார கட்டணங்களை அதிகரிக்குமாறு இலங்கை மத்திய 15

## சுழிபுரம் பகுதியில் சடலமொன்று மீட்பு

யாழ்ப்பாணம், மார்ச் 5

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொன்னாலை பருத்தித்துறை வீதியில் சுழி 10

'ரீ குடிக்க நான் வரவில்லை'

## அபிவிருத்தியை துரிதப்படுத்தவே ஒருங்கிணைப்புக் குழுவில் நான்!

அங்கஜனுக்கு கீதநாத் பதிலடி

யாழ்ப்பாணம், மார்ச் 5

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் அபிவிருத்திப் பணிகளைத் துரிதப்படுத்தவே யாழ்ப்பாணம் மாவட் ஒருங்கிணைப்புக் 15

மக்களின் எதிர்ப்பையடுத்து

## மன்னாரிலிருந்து வெளியேறுகிறது கனியமணல் அகழ்வு நிறுவனம்!

மன்னார், மார்ச் 5

மன்னாரில் கனியமணல் அகழ்வுப் பிரச்சினை தீவிரம் பெற்றுள்ள நிலையில், மக்களின் எதிர்ப்பை மீறி இந்த அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்படாது என்று தெரிவித்துள்ள குறித்த நிறுவனம், மன்னாரை 16

கிரிக்கெட் உலகைக் கட்டியாண்ட

## சுழல் ஜாம்பவான் வோர்ண் மறைவு!



கிரிக்கெட் உலகின் ஆகச் சிறந்த சுழற்பந்து வீச்சாளர்களில் ஒருவரான ஆஸ்திரேலியாவின் ஷேன் வோர்ண், தனது 52ஆவது வயதில் மாரடைப்புக் காரணமாக நேற்றுக் காலமானார். அணியில் விளையாடிய 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# எரிபொருள் நெருக்கடியால் பாடசாலைச் சேவைகள் பாதிப்பு

கொழும்பு,மார்ச் 5

**நாட்டில் எரிபொருள் நெருக்கடி தொடர்வதால், அடுத்த வாரத்திலிருந்து பாடசாலைப் போக்குவரத்துச் சேவைகள் பாதிப்படையும் என்று பாடசாலைப் போக்குவரத்துச் சங்கம் எச்சரித்துள்ளது.**



பாடசாலைகள் எதிர்வரும் 7 ஆம் திகதி மீண்டும் ஆரம்பமாகவுள்ளன. தனியார் மற்றும் அரச பேருந்து தொழிற்சங்களிடையிலான சந்திப்பில், எரிபொருள் நெருக்கடி தொடர்பாக ஆராயப்பட்டு அதற்குத் தீர்வு வழங்கப்பட்டது. பாடசாலைச் சேவை வாகனச் சாரதிகள் தமது அடையாள அட்டைகளைச் சமர்ப்பித்து, இலங்கைப் போக்குவரத்துசபை டிப்போக்களிலிருந்து எரிபொருளைப் பெற்றுக் கொள்ளும் வழிமுறையொன்றை ஏற்படுத்தவேண்டும்.

கொரோனாத் தொற்று இரண்டு வருடங்களுக்கு மேலாக மாணவர்களின் கல்வியை சீரழித்துள்ளது. மீண்டும் எரிபொருள் நெருக்கடியால் அவர்களது கற்றல் நடவடிக்கைகளைச் சீர்குலைக்கவேண்டாம் என்று பாடசாலை போக்குவரத்துச் சங்கத்தின் செயலாளர் லலித் சந்திரசிறி தெரிவித்துள்ளார். (ஒ-4-ரி1)

## எரிபொருளுக்காக காத்திருப்போருக்கு பாற்சோறும், பானமும்

கொழும்பு,மார்ச் 5

எரிபொருளைப் பெற்றுக் கொள்ள நீண்ட வரிசைகளில் காத்திருந்த மக்களுக்குப் பாற்சோறு மற்றும் மென்பானங்களை மனிதாபிமானமுடைய சிலர் வழங்கி வருகின்றனர்.

இந்தச் சம்பவம் வஸ்கடுவைப் பொத்துப்பிட்டிய பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

நாட்டில் தொடர்ச்சியாக எரிபொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில், மக்கள் வாகனங்களுடனும், கொள்கலன்களுடனும் எரிபொருள் விற்பனை நிலையங்களுக்கு முன்னால் நீண்ட வரிசைகளில் காத்திருக்கின்றனர். தொடர்ச்சியாக 2 நாள்களுக்கு மேலும் எரிபொருளுக்காக மக்கள் காத்திருக்க வேண்டியுள்ளது. (ஒ-4,ரி1)

## நூல் வெளியீடு

சாவகச்சேரி, மார்ச் 5

மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலய முன்னாள் அதிபர் அமரர் தா. இராமலிங்கம் ஆக்கிய கவிதைகள் நூல் வெளியீடு, இன்று பிற்பகல் 3 மணிக்கு கொடிகாமம் நட்சத்திர மஹால் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் நூல் அறிமுகவுரையை கவிஞர் கருணாகரனும் வெளியீட்டுரையை மருத்துவர் இராமலிங்கம் அருட்செல்வமும் ஆற்றவுள்ளனர். அத்துடன் நூலின் முதற்பிரதியை முல்லைத்தீவு மாவட்ட மேலதிக மாவட்டச்செயலர் க.கனகேஸ்வரன் பெற்றுக்கொள்வார். (ஒ-4,27,125)

# விமர்சித்தால் வெளியேறுங்கள் இல்லை வெளியேற்றப்படுவீர்கள்

## கொதிக்கும் கோத்தாபய

கொழும்பு, மார்ச் 5

அரசை விமர்சிப்பவர்களுக்கு அமைச்சுப் பதவி எதற்கு? அமைச்சரவையிலிருந்து கொண்டு அரசை விமர்சிப்பவர்கள் ஒன்றில் தாமாக வெளியேறவேண்டும். இல்லையேல் எனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி அவர்களை நானே வெளியேற்றுவேன். இவ்வாறு கடும் தொனியில் எச்சரிக்கையுடன் வலியுறுத்தியுள்ளார் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச.

அரசின் மூத்த அமைச்சர்களுடன் நேற்றுமுன்தினம் நடத்திய அவசர கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நான் 69 இலட்சம் மக்களின் ஆணையுடன் தான் ஆட்சி அதிகாரத்தைக் கையில் எடுத்தேன். எனக்கு ஆணை வழங்கிய மக்களை ஏமாற்றவும் மாட்டேன்; அவர்களுக்குத் துரோகம் செய்யவும் மாட்டேன்.

நாடு இன்று பொருளாதார ரீதியில் பெரும் சவால்களை எதிர்நோக்கியுள்ளது. இந்த நிலையில், அமைச்சரவையில் இருக்கும் சிலர், பொறுப்பிழந்து, பதவி என்ற



ஒன்றை மறந்து கீழ்த்தரமாகச் செயற்படுகின்றனர். அரசைக் கண்டபடி விமர்சிக்கின்றனர். இவர்களுக்கெல்லாம் அமைச்சுப் பதவி எதற்கு?

அரசை வீழ்த்துவதுதான் இவர்களின் நோக்கமாக இருந்தால் அது ஒரு போதும் சாத்தியமாகாது. எமது அரசை எவராலும் அசைக்கவே முடியாது - என்றார். (ஒ-22)

## பிரதேசசபை உறுப்பினரின் வீட்டுக்குள் அத்துமீறி தாக்குதல்

யாழ்ப்பாணம்,மார்ச் 5



மின்சாரம் துண்டிக்கப்பட்ட தருணத்தில், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மானிப்பாய் பிரதேச சபை உறுப்பினர் ஒருவரது வீட்டுக்குள் அத்துமீறி நேற்றுமுன்தினம் இரவு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

பண்டத்தரிப்பு பகுதியில் உள்ள அவரது வீட்டுக்குள் மதுபோதையில் புகுந்த நபர், அவரையும், தந்தையையும் தாக்கியுள்ளார். வீட்டின் கேற்றையும், வேலித் தகரங்களையும் சேதமாக்கியதுடன், வீட்டிலிருந்த பெண்களையும் அச்சுறுத்தியுள்ளார்.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரான அங்கஜன் இராமநாதனின் பெயரைக் கூறியே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் பிரதேச சபை உறுப்பினர் இளவாலைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (ஒ-4,27,125)

## கொரோனாவால் உயிரிழந்தவர்களை எந்த மயானத்திலும் புதைக்க முடியும்

கொழும்பு.மார்ச் 5



கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் சடலங்கள் இனி உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும். அவர்கள் தங்களது விருப்பத்துக்கு ஏற்ப எந்த மயானங்களிலும் சடலங்களை அடக்கம் செய்யவோ, தகனம் செய்யவோ முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

உயிரிழந்து 24 மணித்தியாலயங்களுள் சடலம் உறவினர்களுக்குக் கையளிக்கப்படும். அவர்களுக்கு விருப்பமான இடங்களில் அது புதைக்கப்படலாம் அல்லது தகனம செய்யப்படலாம். சடலங்கள் கையளிக்கப்பட்டு, 24 மணித்தியாலயங்களுள் இறுதிக்கிரியைகளை முடிக்கவேண்டும்.

கொரோனாத் தொற்றால் உயிரிழப்பவர்களின் சடலம், உடற் கவசப்பை மற்றும் பிரேதப் பெட்டியில் வைத்து, சீல் வைக்கப்படும். அதற்கு முன்பாக உறவினர்கள் சடலங்களைப் பார்வையிடலாம். அவற்றை நேரடியாக மருத்துவமனையிலிருந்து மயானத்துக்குக் கொண்டுசெல்ல வேண்டும் -என்றுள்ளது. (ஒ-4,ரி1)

# பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கூட்டுறவு பணியாளர்கள் போராட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச் 5



சம்பள உயர்வு வழங்கவேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து, சங்கானை பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கக் கூட்டுறவுப் பணியாளர்கள், சங்க முன்றிலில் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஊதியத்தை அதிகரி, நிரந்தரப் பணியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்கு, தற்காலிக ஊழியர்களுக்கு நிரந்தர நியமனத்தை வழங்கு, வேலையோ அதிகம் சம்பளமோ குறைவு, கடமைக்கு உரிய சம்பளத்தை [illegible] போராட்டத்தில் ஈடுபட்டனர்.

"17 வருடங்களாக சங்கத்துக்குக் கிளை முகாமையாளர் ஒருவர் நியமிக்கப்படவில்லை. இதனால் நிர்வாகச் செயற்பாட்டை நடத்துவது கடினம். 8 வருடங்களாக நிரந்தர நியமனம் பெற்ற ஊழியர்களுக்கான பதவி உயர்வு, இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை வழங்கப்பட வேண்டிய நிலையில், அதுவும் நிறைவேற்றப்படவில்லை. 6 வருடங்களாக தற்காலிக ஊழியராகப் பணியாற்றி வருகின்ற ஊழியர்களுக்கான நிரந்தர நியமனம் இன்னும் வழங்கப்படவில்லை" என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். (ஒ-4,125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வடக்கில் 8 லட்சம் கிலோ நெல் கொள்வனவு

## கூட்டுறவு ஆணையாளர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், மார்ச் 5**

**வடக்கு மாகாணக் கூட்டுறவுத் திணைக்களத்தால், விவசாயிகளிடமிருந்து சுமார் 7 லட்சத்து 82 ஆயிரத்து 850 கிலோ நெல் கொள்வனவு செய்யப் பட்டுள்ளது -என்று வடமாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருமான மு. நந்தகோபாலன் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்;

வடக்கு மாகாணத்திலுள்ள யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகளிடமிருந்து கூட்டுறவுத் திணைக்களத்தால் நிர்ணயிக்கப்பட்ட விலையில் நெல் கொள்வனவு செய்யப்படுகின்றது.

சுமார் 52 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் கொள்வனவு செய்யப்பட்ட நெல், வடமாகாணக் கூட்டுறவுத்திணைக்களத்தின் கீழ் உள்ள கூட்டுறவுச் சங்கங்களின் அரிசி ஆலைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

இதனூடாகப் பெறப்படும் அரிசி, கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நியாயமான விலையில் பொது மக்களுக்கு விற்பனை செய்வதற்கு பகிர்ந்தளிக்கப்படும்.

விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்முதல் செய்வதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம். விலையேற்றம் ஏற்படலாம் என்ற எதிர்பார்ப்பில் விவசாயிகள் நெல்லை விற்பனை செய்யாது தேக்கி வைத்திருக்க வேண்டியதில்லை -என்றார். (ஒ-4-20)

## ஐ.நா. ஆணையாளருக்கு இலங்கை அழைப்பு

கொழும்பு, மார்ச் 5

இலங்கைக்கு வருகை தருமாறு, ஐ.நா. உயர் ஆணையாளருக்கு இலங்கைத் தூதுக்குழு அழைப்பு விடுத்துள்ளது.

அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தலைமையிலான தூதுக்குழு ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஆணையாளர் மிச்செல் பச்லெட்டை, ஜெனிவாவிலுள்ள அவரது அலுவலகத்தில் கடந்த புதன்கிழமை சந்தித்தது.

ஆரம்பத்தில் 20 நிமிடங்கள் மாத்திரமே ஒதுக்கப்பட்டிருந்த சந்திப்பு, 50 நிமிடங்கள் வரை நீடித்தது.

ஆணையாளர் தனது அலுவலகத்துடன் ஒத்துழைத்துப் பணியாற்றுமாறு இலங்கையை வேண்டிக் கொண்டார்.

இலங்கையில் மனித உரிமைகள் குறித்த ஆணையாளரின் அறிக்கை, கள யதார் தங்களுக்கு நேரொத்ததாக அமையவில்லையென்று பீரிஸ் தெரிவித்தார்.

சந்திப்பில் இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன, நீதியமைச்சர் அலி சப்ரி மற்றும் வெளிநாட்டமைச்சின் செயலாளர் பேராசியர் ஜயநாத் கொலம்பகே ஆகியோரும் பங்கேற்றனர். (ஒ-4-ரி1)

# இரசாயன உரத் தடையால் நெல் விளைச்சல் படுவீழ்ச்சி

கொழும்பு, மார்ச் 5

இரசாயன உர இறக்குமதித் தடையால், இந்த வருட பெரும்போக நெல் விளைச்சல் 2.3 மில்லியன் மெற்றிக் தொன்னாக வீழ்ச்சியடையும் என்று விவசாயத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் ஏப்ரல் மாதத்தில் கொண்டு வரப்பட்ட இந்தத் தடை 6 மாதங்களின் பின்னர் நவம்பர் மாதம் நீக்கப்பட்டது.

இந்தத் தடை நடைமுறைப்படுத்தப்படாமலிருந்தால், திணைக்களம் எதிர்பார்த்திருந்த 3.29 மில்லியன் மெற்றிக் தொன் அதிகூடிய விளைச்சலைப் பெற்றிருக்க முடியும்.

இந்த நிலையில் கடந்த 6 வருடங்களில் அதி குறைந்த விளைச்சலையே பெற வேண்டியேற்பட்டது.

2019/2020 ஆம் ஆண்டு பெரும்போகத்தில் 3.2 மில்லியன் மெற்றிக் தொன் அதிகூடிய விளைச்சல் பெறப்பட்டது என்றும் திணைக்களத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-ரி1)

# ஆளுநரின் செயலர் சந்திப்பு முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை

## முன்பள்ளி ஆசிரியர்கள் தெரிவிப்பு



முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளருக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பில் எந்தவித ஆக்கபூர்வமான முடிவும் எடுக்கப்படவில்லை என்று முன்பள்ளி ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர். முன்பள்ளி ஆசிரியர்களின் பிரதிநிதிகளுக்கும் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்றது. இதனையடுத்தே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர். இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது,

வட மாகாணத்தைச் சேர்ந்த 5 மாவட்டங்களின் முன்பள்ளி ஆசிரியர்கள், கடந்த 10 நாள்களாகத் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்ற நிலையில், எமது போராட்டத்துக்கு எந்தவிதமான ஆக்கபூர்வமான முடிவும் எடுக்கப்படவில்லை.

அத்துடன் எதிர்காலத்தில் தொடர்ச்சியாக இது போன்ற போராட்டத்தை முன்னெடுப்பதன் மூலமே எமக்குரிய தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும் -என்றனர். (ஒ-14-27)




நேர்சரி ரீச்சர்மார் தங்களுக்கு சம்பளத்தைக் கூட்டித் தரச் சொல்லிப் போராட்டம் நடத்தினவையெல்லோ. அவையின்ர பிரச்சினைக்கு தீர்வு காணுறதுக்காக ஒரு பேச்சுவார்த்தை ஆளுநரின்ர செயலாளரோட நடந்தது. உண்மையில நேர்சரி ரீச்சர்மார் எடுக்கிற சம்பளம் அவை செய்யிற வேலைக்கு ஒரு மூலைக்கும் பத்தாது. ஒரு கம்பஸ் லெக்சருக்கு குடுக்கிற அளவு சம்பளம் அவைக்கு குடுக்கோணும். ஒன்டுமே தெரியாமல் வாற பிள்ளைக்கு எழுத்தில இருந்து பழக்க வழக்கம் வரை எல்லாமே சொல்லிக் குடுக்கிறவை நேர்சரி ரீச்சர்மார்தான். அப்பிடிப்பட்டவைக்கு எங்கட நாட்டில ஒழுங்கான சம்பளமில்லை. இப்பத்தை விலைவாசியில அந்தச் சம்பளத்தை வைச்சு என்ன செய்ய ஏலும்? அதாலதான் போராட்டத்தில இறங்கினவை.

நேற்றையான் பேச்சுவார்த்தையில ஒவ்வொரு மாவட்டத்தில இருந்தும் ரண்டு பிரதிநிதியளை வரச்சொல்லித்தான் ஆளுநரின்ர செயலாளர் அறிவிச்சவர். ஆனால் அதைவிட மேலதிகமாக இந்த நேர்சரி ரீச்சர்மாரின்ர வட மாகாண சங்கத்தின்ர தலைவர், செயலாளர் எண்டு இன்னும் ரண்டுபேர் கூட்டத்துக்கு வந்திருக்கினம். சந்திப்பெல்லாம் முதல் ஒழுங்காத்தான் போய்க்கொண்டிருந்திருக்கு. கிட்டத்தட்ட நாலாயிரம் ரூபா இப்போதைக்கு கூடுதலாத் தரலாம் எண்டமாதிரி ஆளுநரின்ர செயலாளர் சாதகமாக முடிவெடுக்கிற கட்டத்துக்கு போகேக்கதான், ஒரு குண்டைத் தூக்கிப் போட்டிருக்கிறார் முன்பள்ளி ஆசிரியர்களின்ர வடமாகாண தலைவர். 'எங்கட நேர்சரி ரீச்சர்மார் கனபேர் ஓ.எல் பெயில். அதால ஒவ்வொருத்தருக்கும் அவையின்ர கல்வித்தகுதிக்கு ஏத்தமாதிரி சம்பளத்தைக் கூட்டிக் குடுக்கலாம்' எண்டு குட்டையைக் குழப்பிட்டாவாம். அதால இப்போதைக்கு சம்பளத்தைக் கூட்டுறதை ஆளுநர் தரப்பு பிற்போட்டிருக்காம். ரீச்சர்மாருக்கே இப்பிடி அள்ளிவைக்க எப்பிடி இவையால முடிஞ்சது எண்டு மற்ற ரீச்சர்மார் அவையோட சண்டைபிடிக்காத குறைதான்.

'அவை எங்கட போராட்டத்துக்கே ஒத்துழைப்பில்லை. எங்கட சங்கமோ, அரசியல்வாதிகளோ, கட்சிகளோ, எம்.பி.மாரோ, பெற்றோரோ இந்தப் போராட்டத்தை ஒழுங்கு செய்யேலை. நாங்களாத்தான் சுயமா போராட வெளிக்கிட்டனாங்கள். அப்பிடி நாங்கள் புறக்கணிப்புப் போராட்டம் நடத்தேக்ககூட, எங்கட வடமாகாண சங்கத் தலைவரா இருக்கிறவாவின்ர சண்டிலிப்பாய் கோட்டத்தில எல்லா முன்பள்ளியும் இயங்கினது. அப்பவே எங்களுக்கு எதிரா வேலை செய்துபோட்டு. இப்ப நல்லது நடக்கிறதையும் குழப்பிப் போட்டா' எண்டு நேர்சரி ரீச்சர்மார் குற்றப்பத்திரம் வாசிக்கினம். தான் ஆடாட்டியும் தன் தசை ஆடுமெண்டு சொல்லுவினம். ஆனால் இப்பதான் ஏதோ கொஞ்சமெண்டாலும் நேர்சரி ரீச்சர்மாரின்ர சம்பளத்தைக் கூட்ட மேலிடம் மனமிரங்கி இருக்கு. அதுக்கும் அதே ரீச்சர்களுக்கு தலைவர் எண்டு சொல்லுறவையே தட்டி விழுத்திறது நல்ல விசயமில்லை.



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிக விலைக்கு அரிசி இறக்குமதி இலங்கையை சுரண்டும் மியான்மர்

**கொழும்பு, மார்ச் 5**

**அரிசி இறக்குமதிக்காக இலங்கையிடமிருந்த அதிக நிதியை, மியான்மர் பெற்றுக் கொள்கின்றது -என்று 'குளோபல் நியூ நைட் ஓஃப் மியான்மர்' என்ற பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.**

மியான்மரில் இருந்து ஏனைய நாடுகளுக்கு ஒரு தொன் அரிசி 340 தொடக்கம் 350 அமெரிக்க டொலருக்கு இடைப்பட்ட விலையில் ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

எனினும் இலங்கைக்கு ஒரு தொன் அரிசியை ஏற்றுமதி செய்வதற்கு, 440 தொடக்கம் 450 அமெரிக்க டொலருக்கு இடைப்பட்ட விலை அறவிடப்படுகின்றது.

ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கைக்கு அரிசியை ஏற்றுமதி செய்யும்போது மட்டுப்பாடுகள் குறைவாகக் காணப்படுகின்றன.

குறிப்பாக அரிசியின் தரத்தை இலங்கை வரையறுக்கவில்லை.

எனினும், ஐரோப்பிய நாடுகளுக்கும், சீனாவுக்கும் அரிசியை ஏற்றுமதி செய்யும்போது, அந்த நாடுகள் அரிசியின் தரம் தொடர்பான சான்றிதழைக் கோருகின்றன.

அதனால் அந்த நாடுகளுக்கு அரிசியை ஏற்றுமதி செய்வதற்கான செயன்முறை சற்றுக் கடினம்.

அதனால் மியான்மரின் வர்த்தகர்களும், ஏற்றுமதியாளர்களும் இலங்கைக்கு அரிசியை ஏற்றுமதி செய்கின்றனர் என்று மியான்மரின் ரேயின்ற் நோக் அரிசி மொத்த விற்பனைத் திணைக்களத்தின் செயலாளர் யூ தான் ஓ தெரிவித்தார் என்று அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2022 மற்றும் 2023 ஆகிய இரு ஆண்டுகளில் மியான்மர் இலங்கைக்கு ஒரு லட்சம் தொன் வெள்ளை அரிசியையும், 50 ஆயிரம் தொன் புழுங்கல் அரிசியையும் ஏற்றுமதி செய்வது தொடர்பான இரு தரப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-4-இ)



## கிளி.யில் இரண்டாவது திறன் பாடசாலை திறப்பு

கிளிநொச்சி இராமகிருஷ்ண வித்தியாலயத்தின் அனைத்து வகுப்பறைகளும் திறன் வகுப்பறைகளாக மறுசீரமைக்கப்பட்டு திறன் பாடசாலையாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் இரண்டாவது திறன் பாடசாலையாக இந்தப் பாடசாலை விளங்குகின்றது.

இதன் தொடக்க விழா பாடசாலை அதிபர் ந.அமிர்தநாதன் தலைமையில் கடந்த 27ஆம் திகதி நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் செ.உதயகுமார், சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி தெற்கு கல்வி வலயக் கல்விப்பணிப்பாளர் கி.கமலராஜன் ஆகியோர் கலந்துகொண்டனர். இதன்போது வாசிப்பு மற்றும் கற்றல் செயற்பாடுகளுக்கான வளநிலையமும் திறந்து வைக்கப்பட்டுள்ளது. (ச)

## அருந்திகவுக்கு வெள்ளையடித்த ஜனாதிபதியின் விசாரணைக்குழு

கொழும்பு, மார்ச் 5

ராகமை மருத்துவ பீட விடுதி வளாகத்தில் இரண்டு மாணவ குழுக்களுக்கு இடையில் இடம்பெற்ற சம்பவத்தில் இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோ குற்றமற்றவர் என்று, ஜனாதிபதி நியமித்த விசாரணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த விசாரணை தொடர்பான அறிக்கை, ஜனாதிபதி கோத்தாபயவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப்பிரிவு வெளியிட்ட அறிக்கையில்,

கடந்த பெப்ரவரி 1 ஆம் திகதி இரவு ராகமை மருத்துவ பீட விடுதி வளாகத்தில் இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பில் ஆராய்ந்து, அறிக்கை சமர்ப்பிப்பதற்கு அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தலைமையில் குழுவொன்று ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டது. அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே மற்றும் ரமேஷ் பத்திரன ஆகியோர் குழுவின் ஏனைய உறுப்பினர்களாவர்.

மோதல் சம்பவம் மூன்றாம் மற்றும் நான்காம் ஆண்டு மாணவர்களின் பொறுப்பற்ற செயலாக உள்ளதோடு, திட்டமிட்டோ அல்லது வேண்டுமென்றோ நடத்தப்பட்ட விடயமல்ல என்று கிடைத்த ஆய்வு அறிக்கை தெரிவிக்கின்றது.

அருந்திக பெர்னாண்டோவின் மகனையும் அவரது நண்பர்களையும் உடனடியாக கைது செய்ய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தென்னை அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான வாகனத்தை பயன்படுத்தியமைக்காக, ஒழுக்காற்று நடவடிக்கை வாகனத்துக்குப் பொறுப்பான அரச நிறுவனத்துக்கும், இதனை முன்னுதாரணமாகக்கொண்டு வெளியாருக்கு விடுதி வளாகத்துக்குள் அனுமதியின்றி நுழைவதைத் தடுக்க முழு பல்கலைக்கழக வளாகத்தினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் குறிப்பிட்ட வேலைத்திட்டம் ஒன்றை உருவாக்க வேண்டும் எனவும் குழு பரிந்துரைத்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோ எந்தவிதமான தலையீட்டையும் செய்யவில்லை என்று குழுவின் ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. சட்டத்தை பாரபட்சமின்றி நடைமுறைப்படுத்த அவர் வழிவகை செய்துள்ளார். அனைத்து விடயங்களையும் கருத்திற் கொண்டு முன்னாள் இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோ குற்றமற்றவர் என முடிவுசெய்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-இ)

## வயலில் ஒருவரை பாம்பு தீண்டியது

சாவகச்சேரி, மார்ச் 5

மிருசுவிலில் உள்ள நெல் வயலில் நேற்றுமுன்தினம் நெற்செய்கை அறுவடையில் ஈடுபட்ட வேளையில் ஒருவரை பாம்பு தீண்டியதாக தெரிவிக்கப்பட்டது.

நுணாவில் பகுதியைச் சேர்ந்த செல்லையா அமரசேகரம் (வயது 65) என்பவரையே பாம்பு தீண்டியுள்ளது.

குறித்த நபர் சிகிச்சைக்காக சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டார். (ஒ-14-9)

## எதுவும் நிரந்தரமில்லை கம்மன்பில ஆதங்கம்



கொழும்பு,மார்ச் 5

அமைச்சு பதவிகள் நிரந்தரம் இல்லை. அடுத்த அமைச்சுப் பதவிக்காக மனசாட்சியை மறைக்கவும் முடியாது என்று முன்னாள் எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

அமைச்சர்களாக இருந்த விமல் வீரவன்ச மற்றும் உதய கம்மன்பில ஆகியோர், ஜனாதிபதியின் அதிகாரத்தின் கீழ், நேற்றுமுன்தினம் பதவி நீக்கப்பட்டனர்.

இதனையடுத்து உதய கம்மன்பில, எரிசக்தி அமைச்சுக்குச் சென்று, தனக்குச் சொந்தமான உடமைகளை எடுத்துச் சென்ற போது, ஊடகங்களுக்கு இதனைத் தெரிவித்தார். (ஒ-4-இ)



## ஜேர்மனி பல்கலை மாணவர்கள் தெல்லிப்பழைக்கு களப்பயணம்

யாழ்ப்பாணம். மார்ச் 5

ஜேர்மனி நாட்டைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவர்கள், தெல்லிப் பழைப் பிரதேசத்துக்கு நேற்றுமுன்தினம் களப் பயணத்தை மேற்கொண்டனர். தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தின் அலுவலகச் செயற்பாடுகள் மற்றும் பிரதேச செயலகத்தால் முன்னெடுக்கப்பட்டு வரும் நலத் திட்டங்கள் தொடர்பில் கேட்டறிந்தனர்.

போரால் பாதிக்கப்பட்ட பிரதேசத்தின் மீளக்குடியமர்த்தும் செயற்றிட்டங்கள், மீள்குடியேற்றப்படும் மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் உள்ளிட்ட செயற்பாடுகள் தொடர்பில் பிரதேச செயலர் எடுத்துக் கூறினார்.

சிறந்த நிர்வாகக் கட்டமைப்பின் கீழ், பொதுமக்கள் நலன் சார்ந்த செயற்றிட்டங்களை முன்னெடுப்பதற்கு, வலி. வடக்குப் பிரதேச செயலகத்துக்கு மாணவர்கள் பாராட்டுத் தெரிவித்தனர்.

தொடர்ந்து வலி. வடக்கின் மீள்குடியேற்றப் பிரதேசங்களுக்கும் மாணவர்கள் களப்பயணம் மேற்கொண்டு அங்குள்ள நிலைமைகளைக் கேட்டறிந்தனர். (ஒ-4-27)

## மக்களை ஏமாற்றும் பங்காளிக் கட்சிகள்

### எதிர்க்கட்சி எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 5

அரசுடன் இருக்கும் பங்காளிக் கட்சிகள் அரசை விமர்சிப்பது, மக்களை ஏமாற்றும் நாடகம் என்று எதிர்க்கட்சி உறுப்பினர் ஹர்ஷண ராஜகருணா தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

வரலாற்றில் ஒருபோதும் இல்லாதவகையில் நாடு பெரும் நெருக்கடிகளைச் சந்தித்துள்ளது. இந்த அரசால் தொடர்ந்தும் நாட்டைக் கொண்டு செல்ல முடியாது. அமைச்சரவையில் எடுக்கும் தீர்மானங்களுக்கு கையை உயர்த்திவிட்டு, வெளியில் வந்து, அரசின் நடவடிக்கைகளை விமர்சித்துப் பயனில்லை. இது மக்களை ஏமாற்றுவதற்காக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் நாடகம். உண்மையில் அரசின் நடவடிக்கைகளுக்கு இவர்கள் எதிர்ப்பு தெரிவிப்பதாக இருந்தால், [illegible] எதிர்க்கட்சியுடன் இணைந்து [illegible] குரல்கொடுக்க முன்வரவேண்டும் -என்றார். (ஒ-4-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெற்செய்கை பாதிப்பு; பதிவுகள் சேகரிப்பு

சாவகச்சேரி, மார்ச் 5

தென்மராட்சி தெற்கு - மறவன்புலவு கமக்கார அமைப்புகளுக்குட்பட்ட விவசாய நிலங்களில் கடந்த காலபோக நெற்செய்கையில் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் பதிவுகள் எதிர்வரும் 7 ஆம் 8 ஆம் திகதிகளில் கைதடி கமநல சேவைகள் நிலையத்தில் சேகரிக்கப்படவுள்ளன.

இதற்கமைய பாதிக்கப்பட்ட விவசாயிகள் தமது தேசிய அடையாள அட்டை, கடந்த வருடம் ஏக்கர் வரி செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டு, திரவ சேதனப்பசளைப் பற்றுச்சீட்டு ஆகியவற்றுடன் வருகை தருமாறு கமக்கார அமைப்பினர் அறிவித்துள்ளனர். (ம-14-9)

# மட்டுப்படுத்தப்பட்ட டீசல் விநியோகம்



மன்னார், மார்ச் 5

மன்னார் மாவட்டத்தில் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் கையிருப்புக் குறைவடைந்துள்ளதால், வாகனம் ஒன்றுக்கு 2 ஆயிரம் ரூபாவுக்கே டீசல் விநியோகிக்கப்படுகின்றது.

டீசல் இன்மையால் தூர இடங்களுக்குச் செல்லும் தனியார் பேருந்தின் சாரதிகள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

அதேவேளை சில இடங்களில் அதிக விலைக்கு கள்ளச் சந்தையில் டீசல் விற்பனை செய்யப்படுகின்றது என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-4-213)

# போர் வெற்றியின் பின்னர் இலங்கையில் இனவாதம்

## ஹக்கீம் தெரிவிப்பு

அம்பாறை, மார்ச் 5

**இலங்கையில் போர் வெற்றியின் பின்னர், இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும், அதனூடாக நாட்டைக் கட்டியெழுப்புவதற்கும் பதிலாக, சிறுபான்மை மக்களை இலக்குவைத்து இனவாதம் தூண்டப்படுகின்றது என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.**

நியூஸிலாந்தின் தூதுவர் மைக்கல் அப்பிடன், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீமை கட்சியின் தலைமையகத்தில் கடந்த புதன்கிழமை சந்தித்தார். சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை முறைகேடாகப் பயன்படுத்தி சிறுபான்மை சமூகத்தினர் அநேகர் போதிய சாட்சியங்களின்றி கைது செய்யப்பட்டு, வருடக்கணக்காக சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர். அந்தச் சட்டம் முற்றாக ஒழிக்கப்பட்டு அதற்குப் பதிலாக வேறு சட்டம் கொண்டு வரப்படலாம். ஆனால், உள்நாட்டு மற்றும் சர்வதேச அழுத்தங்களையும் மீறி, அதில் அரசுக்குத் தேவையான விதத்தில் சில திருத்தங்களை மட்டும் செய்வதற்கு முயற்சிக்கின்றனர்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் பற்றி உரிய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு, குற்றமிழைத்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்.

ஆனால், அனைத்தும் மர்மமாக இருக்கிறது. அரசுக்கு வாக்களித்த மக்களுக்கு இப்போது வெறுப்பு அதிகரித்துள்ளது. அரசு சரிவர பொருளாதாரத்தை முகாமைத்துவம் செய்யாததன் விளைவாக நாடு பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. எதற்கெடுத்தாலும் கொரோனாத் தொற்றைக் காரணம் காட்டி சமாளித்துக் கொண்டு போகின்றனர். முஸ்லிம்களுக்கு சமய, கலாசார ஆடைகள் அணிவதற்கு பெரும்பாலும் அனுமதி அளிக்கப்படுவதில்லை. நிலபுலங்கள் ஆக்கிரமிக்கப்படுகின்றன. புராதன இடங்கள் கூடப் பறிக்கப்படுகின்றன. முஸ்லிம்களின் விவாக, விவாகரத்துச் சட்டத்திலும் பிரச்சினைகளைக் கிளப்பியுள்ளனர் என்று தெரிவித்தார். (ம-4-30)



# 650 தென்னை மரங்கள் யானைகளால் அழிப்பு

கிளிநொச்சி, மார்ச் 5

கிளிநொச்சி - முக்கொம்பன் கிராமத்தில் இதுவரை சுமார் 650க்கும் மேற்பட்ட தென்னை மரங்கள் காட்டு யானைகளால் அழிக்கப்பட்டுள்ளன.

முக்கொம்பன் கிராமத்தில் 200க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

குறித்த கிராமத்தில் வாழும் பெருமளவான குடும்பங்கள் விவசாயத்தையே வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளன. இந்த நிலையில் நாளாந்தம் காட்டு யானைகளின் அட்டகாசம் இங்கு அதிகரித்துள்ளது.

குறிப்பிட்ட சில காலங்களுக்குள் 650க்கும் மேற்பட்ட தென்னை மரங்கள் காட்டு யானைகளால் இங்கு அழிக்கப்பட்டுள்ளன என்று பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். (ம-4-113)

# இரணைமடுக் குளத்தின் நன்னீர் மீன்பிடி பாதிப்பு

கிளிநொச்சி, மார்ச் 5

இரணைமடுக் குளத்தின் கீழ் நன்னீர் மீன்பிடியில் ஈடுபட்டு வரும் 19 வரையான பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் உள்ளடங்கலாக நூற்றுக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பல்வேறு இடர்களைச் சந்தித்துள்ளனர்.

இவர்கள் தொழிலுக்குப் பயன்படுத்தும் மீன்பிடி வலைகளை முதலைகள் சேதமாக்கியுள்ளன. அத்துடன் குளத்துக்குச் செல்லும் வீதியில் காட்டு யானைகளின் அச்சுறுத்தல் மற்றும் காட்டு விலங்குகளின் அச்சுறுத்தல்கள் ஏற்பட்டுள்ளன. வீதியில் மின் விளக்குகளும் பொருத்தப்படவில்லை. இதனால் இரவு வேளைகளில் தொழிலுக்குச்செல்லும் மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். தமது தொழிலை முன்னெடுத்துச்செல்ல போதிய வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-4-113)

# கனரக வாகன பயிற்சிநெறி தொடர்பான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மார்ச் 5

சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தினர் யாழ். மாவட்டத்தில் உள்ள சமுர்த்திப் பயனாளிகள் குடும்பங்களைச் சேர்ந்த இளையோருக்கு கனரக வாகன தொழிற்பயிற்சி நெறியை விரைவில் ஆரம்பிக்கவுள்ளனர்.

பயிற்சிநெறிகள் தொடர்பான கலந்துரையாடல்கள் ஊமாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலக பிரிவுகளிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்கமைய நேற்று காரைநகர், சங்கானை, சண்டிலிப்பாய், உடுவில், தெல்லிப்பழை ஆகிய பிரதேச செயலகங்களிலும் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடல் எதிர்வரும் 7ஆம் திகதி நெடுந்தீவு பிரதேச செயலகத்திலும் இடம்பெறவுள்ளது.

கலந்துரையாடல்களுக்கான ஏற்பாடுகளை அந்தந்தப் பிரதேச செயலக சமுர்த்தி முகாமையாளர்களை மேற்கொள்ளுமாறு சமுர்த்தித் திணைக்கள யாழ். மாவட்டப் பணிப்பாளர் தி.விஸ்வரூபன் அறிவித்துள்ளார். (ம-14-9)



# மணல் அகழப்படும் இடங்கள் விசேட குழுவால் அவதானிப்பு

மன்னார், மார்ச் 5

மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவில், மணல் அகழ்வு செய்யப்படும் இடங்களை, திணைக்களத் தலைவர்கள், அரச அதிகாரிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் அரசியல் பிரதிநிதிகள், உள்ளடங்கிய விசேட குழுவினர் நேற்றுமுன்தினம் நேரடியாகப் பார்வையிட்டனர்.

இலுப்பைக்கடவை, கூறாய் போன்ற பகுதிகளில் உள்ள ஆறுகளின் தற்போதைய நிலைமை, பழமை வாய்ந்த மரங்கள் அழிக்கப்படுகின்றமை தொடர்பிலும் குழுவினர் கலந்துரையாடினர். (ம-4-56)

# கஞ்சாவுடன் கைதானவருக்கு சமுதாய சீர்திருத்தப் பணி

மன்னார், மார்ச் 5

கஞ்சா வைத்திருந்த குடும்பத் தலைவருக்கு நீதிமன்றால், சமுதாய சீர்திருத்தக் கட்டளை பிறப்பிக்கப்பட்டது. மன்னார் வெள்ளாங்குளம் பகுதியில் 500 மில்லி கிராம் கஞ்சா பொட்டலம் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் குடும்பத்தலைவர் ஒருவர் அண்மையில் கைது செய்யப்பட்டார். அவர் மன்னார் மாவட்ட நீதிவான் நீதிமன்றில் கடந்த புதன்கிழமை முற்படுத்தப்பட்டார். சந்தேகநபர் குற்றத்தை ஏற்றுக் கொண்டதை அடுத்து, அவருக்கு 50 மணித்தியாலங்கள் சமுதாய சீர்திருத்தக் கட்டளை பிறப்பிக்கப்பட்டது. கட்டளையை ஏற்றுக்கொள்ளாத தவறும் பட்சத்தில் 9 ஆயிரம் ரூபா தண்டம் செலுத்துமாறு நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டது. குற்றவாளி சமுதாய சீர்திருத்தக் கட்டளையை ஏற்றுக் கொண்டார். (ம-4-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் நோக்கத்துக்காகவே கையெழுத்துப் போராட்டம்

## சுரேஷ் பிரேமச்சந்திரன் விசனம்

**யாழ்ப்பாணம்,மார்ச் 5**

**ஐ.நா. மனித உரிமைகள் சபையில் பயங்கரவாதத் தடைச்சட்ட நீக்கம் தொடர்பிலான பிரேரணைகள் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், அரசியல் நோக்கத்துக்காக இப்போது கையெழுத்துப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.**

ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தால், தமிழ் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்ட நிலையில், அதனை நீக்குமாறு ஏற்கனவே ஐ.நாவிடம் நாம் கோரிக்கை முன்வைத்துள்ளோம்.

ஆனால் தற்போது கையெழுத்துப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, முன்னாள் சபாநாயகர் கருஜய சூரிய மற்றும் முஸ்லிம் தரப்புகளும் இதில் கையெழுத்திட்டிருந்தனர்.

சந்திரிகா ஜனாதிபதியாக இருந்த போது பயங்கரவாதத் தடைச்சட்டம் பிரயோகிக்கப்பட்டது. அப்போது அவருக்கு இது பாரதூரமான சட்டமாகத் தெரியவில்லையா?

கடந்த காலங்களில் முஸ்லிம் தரப்பினர் தமிழ் மக்கள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் வாடும் போது, அவர்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுப்பதற்கு ஏன் முன்வரவில்லை?

இப்போது இவர்கள் ஆட்சி அதிகாரம் தங்களிடம் இல்லை, தங்களின் சுதந்திரம் பறிபோய்விடும் என்பதற்காகவே கையெழுத்துப் போராட்டத்தை நடத்துகின்றனர்.

தமது அரசியல் தேவைகளுக்காக பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குமாறு கோரி, கையெழுத்துப் போராட்டத்தை நடத்துவது வேடிக்கையாக உள்ளது- என்றார். (ஒ-4-20)




# பரந்தன் நகரில் பொலிஸ் காவலரண்

கிளிநொச்சி, மார்ச் 5

பரந்தன் நகரப்பகுதியில் பொலிஸ் காவலரண் ஒன்று கடந்த புதன்கிழமை அமைக்கப்பட்டுள்ளது.

பரந்தனில் அண்மைக்காலமாக குற்றச்செயல்கள், கொலை, ஆள்மிரட்டல், திருட்டுச் சம்பவங்கள் எனப் பல்வேறு விதமான சட்டவிரோத செயல்கள் இடம்பெறுவதாக பொலிஸாருக்குக் கிடைத்த முறைப்பாடுகளுக்கமைய குறித்த பொலிஸ் காவலரண் அமைக்கப்பட்டது. குறித்த இடத்தில் இடம்பெறும் சட்டவிரோத செயல்களைக் கட்டுப்படுத்துவதற்காக காவலரண் 24 மணிநேரமும் செயற்படும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஒ-14, 113)



# கரந்தாயில் பாவனையின்றி பாழடையும் சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகம்

கிளிநொச்சி, மார்ச் 5

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட கரந்தாய்ப் பகுதியில் பாவனையின்றி பாழடைந்துவரும் சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலக கட்டடத்தைப் பயன்படுத்துமாறு பொதுமக்கள் கோரியுள்ளனர்.

பொதுமக்கள் நலன்கருதி சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்துக்கென பிரத்தியேக கட்டடம் சில ஆண்டுகளுக்கு முன்னர் திறந்து வைக்கப்பட்டது. ஆனால் குறித்த கட்டடம் பயன்படுத்தப்படாமல் அலுவலக வேலைகள் அனைத்தும் கரந்தாய்ப் பகுதியிலுள்ள முன்பள்ளியில் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. இதனால் முன்பள்ளி கல்விச் செயற்பாடுகளும் பாதிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டுவந்த போதும் இதுவரையில் எந்த வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை பொதுமக்கள் தெரிவித்தனர். (வ-113)

# ஊழல், மோசடிகளுக்கு முடிவு கட்டுவேன்!

## பொன்சேகா சபதம்

கொழும்பு, மார்ச் 5



'ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் நான் சட்டம், ஒழுங்கு அமைச்சைப் பொறுப்பேற்ற பிறகு, நிச்சயம் ஊழல், மோசடிகளுக்கு முடிவு கட்டுவேன்' என்று நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

'எமது ஆட்சியில் சட்டம், ஒழுங்கு அமைச்சு பதவி பொன்சேகாவுக்கு வழங்கப்படும் என கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உறுதியளித்துள்ளார். அந்த உறுதிமொழி நிறைவேறுவதை மக்கள் விரும்புகின்றனர். எனவே, அந்த உறுதிமொழியில் இருந்து தலைவரால் பின்வாங்க முடியாது. இவ்வாறு அமைச்சுப் பதவி கிடைக்கப்பெற்ற பிறகு நிச்சயம் ஊழலுக்கு முடிவுகட்டுவேன். இராணுவத்தில் நான் இருந்தபோது அதனைச் செய்தேன்.

இராணுவத்தில் 4 லட்சம் ரூபா மோசடியில் ஈடுபட்ட ஒரு இராணுவ அதிகாரியை வீட்டுக்கே அனுப்பினேன். எனவே, மேல் மட்டத்தில் இருந்து கீழ்மட்டம்வரை நிச்சயம் கைவைப்பேன். முதலில் மேல் மட்டத்தில்தான் கைவைக்க வேண்டும். அப்போது கீழ்மட்டம் தானாகவே திருந்துவிடும்- என்றார் . (ம-44)

# அனுமதியற்ற நாணயப்பரிமாற்றம் தகவல் தருமாறு கோரிக்கை



கொழும்பு, மார்ச் 5

அதிகாரமளிக்கப்படாத வெளிநாட்டு நாணய வணிகம் பற்றிய தகவல்களை வழங்குமாறு இலங்கை மத்திய வங்கி பொதுமக்களைக் கோரியுள்ளது.

இது தொடர்பில் மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாவது:-

இலங்கையில் வெளிநாட்டு நாணயங்களைக் கொள்வனவு செய்வதற்கான, விற்பனைசெய்வதற்கான, பரிமாற்றம் செய்வதற்கான அனுமதி உரிமம்பெற்ற வங்கிகள், இலங்கை மத்திய வங்கியால் நியமிக்கப்பட்ட நாணய மாற்றுநர்களுக்கும் மாத்திரமே வழங்கப்பட்டுள்ளது.

மத்திய வங்கியின் அனுமதிபெறாத ஏதும் நிறுவனம் அல்லது நபர் அல்லது அமைப்பூடாக வெளிநாட்டு நாணயக் கொடுக்கல், வாங்கல்களில் ஈடுபடுவது சட்டத்துக்குப் புறம்பானது.

இவ்வாறான செயற்பாடுகள் அவதானிக்கப்படுமாயின் இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்துக்கு அறிவிக்குமாறு பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர் -என்றுள்ளது. (வ-இ)

# சிறுவர்திறன் மேம்பாட்டின் அங்குரார்ப்பண நிகழ்வு

சாவகச்சேரி, மார்ச் 5

தென்மராட்சி பிரதேச செயலக பிரிவில் சிறுவர்திறன் மேம்பாடு தொடர்பான கலந்துரையாடலின் அங்குரார்ப்பண நிகழ்வு, அண்மையில் மட்டுவில் மத்தி கிராம அலுவலர் பிரிவில் நடத்தப்பட்டது.

பிரதேச செயலக சிறுவர் அபிவிருத்திப் பிரிவினரும் வேள்ட் விஷன் லங்கா நிறுவனத்தினரும் இணைந்து பிரதேசத்திலுள்ள கிராம அலுவலர் பிரிவுகளில் சிறுவர் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல்களையும் விழிப்புணர்வு வீதி நாடகத்தையும் அரங்கேற்றி வருகின்றனர். (ஒ-14-9)



கோப்பாய் ஆசிரியகலாசாலையின் இந்து மன்றத்தால் உருவாக்[illegible] கடந்த 18 ஆம் [illegible] நடைபெற்றது. (ய)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வலிகாமம் வடக்கு கலைஞர்களின் ஒன்றுகூடல் நிகழ்வும், புதிய நிர்வாகத்தெரிவும் வலி. வடக்கு பிர தேச செயலகத்தில் அண்மையில் நடைபெற்றது. இதன்போது குறித்த செயலகத்தில் கலாசார உத்தியோகத்தராகக் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச்சென்ற அலுவலரின் சேவைகளைப் பாராட்டிக் கலைஞர்கள் அவரைக் கௌரவித்தனர். (ம-14,27)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## அமைச்சரவை மாற்றத்தால் ஆகப்போவது எதுவுமில்லை

கெடுகுடி சொல் கேளாது என்பார்கள். அதன் அர்த்தத்தை இலங்கை மக்கள் இப்போது நேரில் அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள். இராணுவ மனநிலையுடன் ஆட்சிப் பீடத்துக்கு ஏறிய கோத்தாபய ராஜபக்சவால் இலங்கை மக்கள் தினந்தோறும் ஒவ்வொரு விதமான துன்பங்களை எதிர்கொள்கின்றார்கள்.

நாட்டின் பொருளாதாரம் படுத்துவிட்டது. அதனை மீட்பதற்கான வழிவரைபடங்கள் எதுவும் அரசிடம் இல்லை. ஆனாலும் விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை என்பதைப்போல இந்த அரசு செயற்படுகின்றது. பணத்தை அச்சிட்டு பணவீக்கத்தை ஏற்படுத்தியது. டொலரின் பெறுமதியை செயற்கையாகப் பேணுகிறது. இவை எல்லாம் குறுகிய காலத்தில் பிரச்சினைக்குத் தீர்வைத் தருவனபோல இருந்தாலும் நீண்டகால நோக்கில் இலங்கையை மீண்டெழாத நிலைக்கே கொண்டு செல்கின்றன.

பொருளாதார நிபுணர்களின் கருத்துக்களை உள்வாங்குவதற்கு அரசு தயாரில்லை. முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மீது எத்தகைய விமர்சனங்கள் இருந்தாலும், பொருளாதார ரீதியில் நாட்டை படுகுழிக்குள் இருந்து மீட்கும் ஆற்றல் அவருக்கு உண்டு. அவரது ஆலோசனைகளைக் கூட இந்த அரசு இப்போதும் கேட்கத் தயாரில்லை.

அரசின் அமைச்சரவையில் அங்கம் வகித்த மூத்த அமைச்சர்களான விமல் வீரவன்ஸ மற்றும் கம்மன்பில போன்றோர், பொருளாதார வீழ்ச்சி தொடர்பில் அரசைக் கடுமையாக, குறிப்பாக நிதி அமைச்சர் பஸிலை காரசாரமாக விமர்சித்தமை காரணமாக பதவி நீக்கப்பட்டிருக்கின்றார்கள். அரசுக்குள் இருந்து சொல்வதைக் கேட்காமையால் பகிரங்கவெளியில் அரசின் பொருளாதாரத் தோல்விக்கான காரணத்தை அவர்கள் தோலுரித்திருந்தார்கள். அது நிதி அமைச்சர் பஸில் ராஜபக்சவுக்கு ஏற்படுத்திய சீற்றம், அவர்களின் பதவிகளைப் பறித்துள்ளது.

இந்தச் செயற்பாடு கோத்தாபய அரசு திருந்தப் போவதில்லை என்பதையே எடுத்துக்காட்டுகின்றது. விமல் வீரவன்ஸ, கம்மன்பில மாத்திரமல்ல இந்த அரசுக்கு பொருளாதார ரீதியான நிமிர்வுக்கு ஆலோசனை சொல்பவர்கள் எல்லோரையும் ஓரங்கட்டுகின்றது. எல்லாவற்றையும் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்சவே தீர்மானிக்கின்றார்.

ராஜபக்சக்களின் 2010 – 2015 ஆம் ஆண்டு வரையிலான ஆட்சிக் காலத்தில் பஸில் ராஜபக்ச பொருளாதார அமைச்சராகப் பதவி வகித்தார். ஆளே இல்லாத கடையில் ரீ ஊத்துவதைப் போல, ஆள்களே வராத மத்தளவில் சர்வதேச விமான நிலையம், கப்பலே வராத இடத்தில் அம்பாந்தோட்டைத் துறைமுகம் என்பனவற்றை அமைத்தார். இறுதியில் அவற்றுக்கு பெற்றுக்கொண்ட கடனையே திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் அம்பாந்தோட்டைத் துறைமுகம் சீனாவுக்கு 99 ஆண்டுகள் குத்தகைக்குக் கொடுக்கப்பட்டது.

இந்த நாட்டை சீனாவுக்கு விற்பதைத்தவிர பஸில் ராஜபக்ச எதையும் செய்யவில்லை. அப்படிப்பட்ட ஒருவரே, இந்தக் கொரோனாப் பேரிடருக்குப் பின்னரான உலகளாவிய பொருளாதார நெருக்கடியில் இலங்கையின் நிதி , பொருளாதார நடவடிக்கைகளை நிர்வாகம் செய்கின்றார் என்றால், இந்த நாடு முன்னேற்றப் பாதையில் செல்லுமா?

அமைச்சர்களை மாற்றுவதால் எதுவும் நடக்கப் போவதில்லை. நாடு இன்னமும் படுகுழியை நோக்கித் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றது. மக்கள் வீதிக்கு இறங்கி எரிபொருளுக்கும், எரிவாயுவுக்கும், பால்மாவுக்கும், சிமெந்துக்கும், பனடோலுக்கும் வரிசையில் நின்றால் போதாது. அரசை விரட்டியடிக்கத் திரள வேண்டும். இல்லையேல், நவீன சோமாலியாவாக இலங்கை மாறும் நாள் கண்ணுக்கெட்டிய தூரத்தில் தான் உள்ளது.

**நாளொரு நல்வார்த்தை**

"குழந்தைகளிடம் எதையும் திணிக்காதீர்கள். அவர்களின் அறிவை தூண்டி பிரகாசிக்க வையுங்கள்"


*- விளாடிமிர் லெனின்*




# எரிபொருள் நெருக்கடி கைகொடுக்கும் இந்தியா

**கொழும்பு, மார்ச் 5**

**எரிசக்தி நெருக்கடியை எதிர்கொள்ளும் இலங்கைக்கு உதவ, இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனம் முன்வந்துள்ளது.**



12 தொடக்கம் 13 எரிபொருள் தாங்கிகள் இலங்கைக்கு வழங்கப்படும் என்று குறித்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

எரிபொருள்களை வாங்குவதற்காக, இலங்கைக்கு இந்திய அரசால் வழங்கப்பட்ட கடன் வசதியின் கீழ், இவை வழங்கப்படும் என்றும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது. (ஒ-4,இ)

# பயங்கரவாத சட்டத்தை நீக்கக்கோரி ஐ.நா. அலுவலகம் முன்பு போராட்டம்

கொழும்பு.மார்ச் 5

பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கக் கோரியும், நீதிமன்றங்களில் வழக்குத் தொடராமல் சிறைவாசம் அனுபவிப்போரை விடுவிக்கக் கோரியும், கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகத்துக்கு முன்பாக, நேற்றுமுன்தினம் அமைதியான எதிர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மற்றும் சிறைக்கைதிகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் குழுவின் அங்கத்தவர்கள் மற்றும் சிறைவாசம் அனுபவித்து வருபவர்களின் குடும்ப உறுப்பினர்கள் இந்தப் போராட்டத்தில் பங்கேற்றனர்.

போராட்டத்தின் இறுதியில் தமது கோரிக்கைகள் அடங்கிய மனுவை, ஐ.நா.வின் உள்ளூர் பாதுகாப்புப் பிரிவின் அதிகாரியிடம் கையளித்தனர். (ஒ-4,இ)

# இரு உலோகங்களின் விலையும் எகிறியது

கொழும்பு.மார்ச் 5

இறக்குமதி தடைப்பட்டுள்ளதால்,அலுமினியம் மற்றும் நிக்கல் உலோகங்களின் விலையும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த இரண்டு உலோகங்களினதும் பிரதான உற்பத்தியாளராக ரஷ்யா உள்ளது. அத்துடன் இவற்றின் சர்வதேச கையிருப்பும் வேகமாகக் குறைந்துள்ளது. உக்ரைன் மீதான ரஷ்ய ஆக்கிரமிப்பால் உற்பத்திகளின் சந்தைகள் ஸ்தம்பித்துள்ளன.

இவற்றின் உற்பத்தி நிறுவனங்கள் ரஷ்யாவில் இருந்து வெளியேறுவதோடு, கடன் வழங்குநர்கள் நிதி ஒப்பந்தங்களில் இருந்து பின்வாங்கியுள்ளனர். இதனால் அலுமினியம் விலை 2.4 வீதமும், நிக்கல் விலை 2.3 வீதமும் உயர்ந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-4,இ)

**நாளை** 06.03.2022 ஞாயிற்றுக்கிழமை மாசி 22

சுபநேரம் : 09.25 - 10.55
ராகுகாலம்: 04.55 - 06.25
சதுர்த்தி விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்புக்கூறலை வலியுறுத்தினால் தீவிரவாதமாகக் கருதுகிறது இலங்கை

## ஐ.நா.வில் எதிர்க்கட்சி சுட்டிக்காட்டு



**கொழும்பு,மார்ச் 5**

**போரின் பொறுப்புக்கூறல் மற்றும் உயிரிழந்தவர்களுக்கு நீதியை நிலைநாட்டுமாறு கோரினால், அதனை இலங்கை தீவிரவாதமாகக் கருதுகின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கிளைக்கூட்டத்தொடரில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டில் சிறையில் அடைக்கப்பட்டுள்ள ரஞ்சன் ராமநாயக்கவின் விடுதலையை வலியுறுத்தியே நாங்கள் இங்கு வந்துள்ளோம். இலங்கையின் சட்டத்தில் 'நீதிமன்ற அவமதிப்பு' உரியவாறு வரையறுக்கப்படவில்லை. உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம், நிலைமாறு கால நீதி நிலைவரம், அனைவராலும் பரவலாகப் பேசப்படும் பயங்கரவாதத் தடைச் சட்டம் ஆகியன தொடர்பிலும் தெளிவுபடுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, நிறைவேற்றப்பட்ட பயங்கரவாதத்தடைச் சட்டமானது, ஆரம்பத்தில் பயங்கரவாதத்தை இல்லாதொழிப்பதற்கான ஒரு தற்காலிகச் சட்டமாகவே கொண்டு வரப்பட்டது.

மாறாக நாட்டில் பயங்கரவாதம் தீவிரமடைவதற்கும், மேலும் பல பிரச்சினைகள் தோற்றம் பெறுவதற்கும் இந்தச் சட்டம் வழிவகுத்துள்ளமையை வரலாற்று நிகழ்வுகள் உறுதிப்படுத்துகின்றன. இந்தச் சட்டம் சிறுபான்மையினத்தவரின் உரிமைகளும், எமது நாட்டில் பாரம்பரியமாகப் பின்பற்றப்பட்டுவந்த சட்டத்தின் ஆட்சியும் மீறப்படுவதற்கு வழிவகுத்துள்ளது.

அரசியல் ரீதியான தலையீடுகளின்றி, பொலிஸார் சுயாதீனமாகச் செயற்படுவதற்கு இடமளிப்பது உள்ளடங்கலாக கட்டமைப்பு ரீதியில் உரியவாறான மறுசீரமைப்புக்களை மேற்கொள்வதன் ஊடாக தீவிரவாதத்தை முறியடிக்க முடியும்.

இலங்கை ஜனநாயக ரீதியில் மாத்திரமன்றி, பொருளாதார ரீதியிலும் சீர்குலைந்திருக்கின்றது. இவ்வாறானதொரு பின்னணியில், இலங்கை மேற்கொள்ளும் பயணத்தைத் தடுத்து நிறுத்தவேண்டும் - என்றார். (ஒ-4,இ)

# வேலைவாய்ப்புகளுக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், மார்ச் 5

யாழ்.நகரிலுள்ள வர்த்தக ஸ்தாபனங்கள் மற்றும் பொருள்கள் விநியோக நிறுவனங்களில் இருந்து வேலைவாய்ப்புகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கமைய முகாமையாளர், உதவி முகாமையாளர், காசாளர்கள், கணக்காளர், கணக்குப்பதியுநர், அலுவலக உதவியாளர்கள், கணினித்தரவுப்பதியுநர், விற்பனையாளர்கள், விற்பனைப்பிரதிநிதிகள், சாரதிகள் ஆகியவற்றுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆர்வமுள்ள ஆண்,பெண் இருபாலாரும் தங்களது சுயவிவரக் கோவையை இல. 165, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள யாழ்.வணிகர் கழகத்துக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ விண்ணப்பிக்க முடியும்.

அத்துடன் மின்னஞ்சல் மூலம் விண்ணப்பிக்க விரும்புவோர் jaffnachamberofcommerce@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-14)

*எரிபொருள் இல்லை*

# சிறுபோகத்துக்கான விதைப்புத் தாமதம்

முல்லைத்தீவு,மார்ச் 5

சிறுபோகத்துக்கான நெல் விதைப்பை மேற்கொள்வதற்கு முன்னர் நிலத்தைப் பண்படுத்துவதற்கு. எரிபொருள் இன்மையால் உழவியந்திரங்கள் செயலிழந்துள்ளன.

முத்தையன்கட்டுக் குளத்தின் கீழ் சிறுபோக நெற்செய்கைக்காக நீர் திறந்து விடப்பட்டுள்ள போதும், நிலத்தைப் பண்படுத்துவதற்கு உழவு இயந்திரத்துக்கு எரிபொருள் பெற்றுக் கொள்ள முடியவில்லை என்று விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

ஒட்டுசுட்டானில் எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு முன்பாக, உழவு இயந்திரங்களுடன் நீண்ட வரிசையில் விவசாயிகள் காத்திருப்பதை அவதானிக்க முடிந்துள்ளது. எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் முத்தையன்கட்டுக் குளத்தின் கீழான சிறுபோக நெற்செய்கையை ஆரம்பிக்க வேண்டிய கட்டாயத்தில் விவசாயிகள் உள்ளனர்.

அதேவேளை மேட்டுநிலப் பயிர்ச்செய்கையாளர்கள் மற்றும் உப உணவுப் பயிர்ச்செய்கையாளர்களும் எரிபொருள் இன்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர். (ஒ-4-19)



# நாட்டை மீட்க என்னால் முடியும்

## சஜித் உறுதி

கொழும்பு,மார்ச் 5

தற்போது வீழ்ச்சியடைந்துள்ள இந்த நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான என்னால் முடியும். அதற்குத் தேவையான திறமையும் எனக்குள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

யால நலன்புரி மற்றும் ஒத்துழைப்புச் சங்கத்துக்கு நன்கொடை வழங்கும் நிகழ்வில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்;

இரண்டு வருடங்களுக்கு சலுகை அடிப்படையில் எண்ணெய் பெறுவதற்கு 3 மத்திய கிழக்கு நாடுகளுடன் பேச்சு நடத்தினோம். இதற்கு குறித்த 3 நாடுகளும் இணக்கம் தெரிவித்தன. ஆனால் தற்போதைய ஆட்சியில் அவ்வாறான உதவிகளை வழங்குவதற்கு அந்த நாடுகள் தயக்கம் காட்டுகின்றன.

கடுமையான நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்பதற்கு, பெரும் தியாகங்களைச் செய்யவேண்டும். ஊழல், மோசடிகள் மற்றும் அடக்குமுறைகள் இன்றி அதற்கான உண்மையான அர்ப்பணிப்பையும் மேற்கொள்ள வேண்டும் - என்றார். (ஒ-4,இ)

# புதையல் தேடினரென 4 சந்தேகநபர்கள் கைது



முல்லைத்தீவு,மார்ச் 5

புதையல் தேட முயற்சித்தனர் என்ற குற்றச்சாட்டில் தென்னிலங்கையைச் சேர்ந்தவர்கள் உள்ளிட்ட நால்வர் ஒட்டுசுட்டான் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஒட்டுசுட்டான் பழம்பாசிப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இரவு புதையல் தேட முற்பட்டனர் என்ற சந்தேகத்தில் இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த நால்வரையும் பொலிஸார் கைது செய்யதனர். அவர்களிடம் புதையல் தேடுவதற்காகப் பயன்படுத்தப்படவிருந்த பூசைப் பொருள்களும் கைப்பற்றப்பட்டன.

மாத்தறை மாவட்டத்தைச் சேர்ந்த இருவர், புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவர் மற்றும் நெடுங்கேணி சேனைப்பிலவைச் சேர்ந்த ஒருவர் உள்ளிட்ட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(ஒ-4,19)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக 35ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வு பல்கலைக்கழக வேந்தர் தகைசார் பேராசிரியர் எஸ்.பத்மநாதன் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** மேலதிகாரிகள் மூலம் உதவிகள் கிடைத்து மகிழ்வீர்கள். எதிர்பாராத நன்மை ஒன்றை அடைய வாய்ப்பு உள்ளது. பணத்தேவை ஒன்று உடனடியாகப் பூர்த்தியாகும். பொறுமை காப்பது நல்லது.

**இடபம்:** பணியில் இருந்த அழுத்தங்கள் விலகி நிம்மதி அடைவீர்கள். நீண்ட நாளாக எதிர்பார்த்திருந்த நல்ல செய்தி கிடைக்கும். வாழ்வில் முன்னேறுவதற்கான வாய்ப்பு ஒன்று கிடைக்கும்.

**மிதுனம்:** எதிர்பாராத உதவி ஒன்று கிடைக்கும். சுப விசேடம் உறுதியாகும். குடும்பத்தில் அமைதி நிலவும். பதவி உயர்வு கிடைக்கும். பிரச்சினைகளை பேசித்தீர்ப்பீர்கள்.

**கடகம்:** உணவில் கவனம் தேவை. நட்பு வட்டம் விரியும். எந்த விடயம் பற்றியும் அலட்சியமாக இருக்க வேண்டாம். பழைய பிரச்சினை ஒன்று தீர்க்கப்படும். பேச்சினால் நன்மை வரும்.

**சிம்மம்:** பணியிடத்தில் பிறரிடம் தேவையற்ற கடுமை காட்டவேண்டாம். பலகாலம் எதிர்பார்த்த பணம் இன்று கிடைக்கக்கூடும். தாய்வழி உறவுகளின் அன்பும், பாசமும் கிடைக்கப்பெறுவீர்கள்.

**கன்னி:** யாரிடமும் கோபப்படாதபடி பொறுமையாக இருங்கள். குடும்பத்தினரிடையே புரிதல் அதிகரிக்கும். பழைய கவலை நீங்கும். அதிக கவனம் தேவை.

**துலாம்:** பொறுமையுடன் முயன்று வெற்றி இலக்கை நெருங்குவீர்கள். நீங்கள் முயற்சித்த விடயம் சரியாக நடக்கவில்லை என்ற கவலை தீரும். சிறு உதவி கிடைக்கும். நண்பர் சந்திப்பு மகிழ்ச்சி தரும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சி ஒன்றைக் கையாண்டு வெற்றி பெறுவீர்கள். முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படும். ஆன்மிக ஈடுபாடுவரும். சுபச்செய்தி வந்து குடும்பத்தில் மகிழ்ச்சியை உண்டாக்கும்.

**தனுசு:** கருணைச் செயல்களால் மற்றவர்களின் ஆசியைப் பெறுவீர்கள். தனித்திறமையால் உறுதியுடன் செயற்பட்டு வெற்றியை நெருங்குவீர்கள். நல்லவர் உதவியால் நீண்டநாள் முயற்சி ஒன்று சாதகமாக முடியும்.

**மகரம்:** நெருங்கிய உறவினர் மூலம் நன்மை தரும் செய்தி கிடைக்கும். தந்தையின் உடல் ஆரோக்கியம் நல்லபடியாக இருக்கும். திருமண முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படும்.

**கும்பம்:** பணியாளர்கள் சிலருக்குப் பதவி உயர்வு கிடைக்கும். மனநிம்மதி உண்டு. சோம்பலைக் கைவிடுவது நல்லது. காலதாமதம் இல்லாமல் பரபரப்பாகப் பணிசெய்வீர்கள்.

**மீனம்:** நற்செயலால் மனம் நிறைவடையும். எதிர்பார்த்தபடி உதவியைப் பெறுவீர்கள். பிறரது பிரச்சினைகளை தீர்த்து அவர்களது அன்பைப் பெறுவீர்கள் வருமானம் உயரும். வேலைப்பளுவைக் குறைக்க வழி காண்பீர்கள்.



## உக்ரைனிலுள்ள ஐரோப்பாவின் மிகப்பெரிய

# அணுமின் நிலையம் மீது ரஷ்யா தாக்குதல்

கீவ், மார்ச் 5

உக்ரைன் மீது ரஷ்யப் படைகள் 9ஆவது நாளாக தாக்குதல் நடத்தி வரும் நிலையில் தெற்கு உக்ரைனின் எனர்ஹோடர் நகரில் உள்ள சபோரோஷியா அணுமின் நிலையம் மீது நேற்று அதிகாலை ரஷ்யப் படைகள் தாக்குதல் நடத்தியுள்ளன.

இதன்போது அந்த அணுமின் நிலையத்திலுள்ள ஆறு உலைகள் தீப்பிடித்து எரிந்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த அணுமின்நிலையம் புதுப்பிக்கப்பட்டு இயங்கவில்லை எனினும் அங்கு அணு எரிபொருள்கள் உள்ளமையால் அந்தப் பகுதியில் கடும் புகைமூட்டம் தோன்றியுள்ளது.

உக்ரைன் நாட்டுக்கு 25சதவீத மின் விநியோகத்தை வழங்கும் இந்த சபோரோஷியா அணுமின்நிலையம் ஐரோப்பாவின் மிகப்பெரிய அணுமின் நிலையமாகக் காணப்படுகிறது. சபோரோஷியா வெடித்ததால் அது செர்னோபில் அணுஉலை பாதிப்பை விட 10 மடங்கு அதிகமாக இருக்கும் என்றும் சபோரோஷியா அணுஉலை நிலையத்தின் தற்போதைய நிலை குறித்து அறிய உக்ரைனிய அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு வருவதாகச் சர்வதேச அணுசக்திக் கழகம் தெரிவித்துள்ளது. (ச-இ)

# உக்ரைனில் பணயக் கைதிகளாக வெளிநாட்டு மாணவர்கள்

புடின் தெரிவிப்பு

கீவ், மார்ச் 5

உக்ரைன், கார்கிவ் ரயில் நிலையத்தில் இந்திய மற்றும் வெளிநாட்டு மாணவர்களைப் பணயக் கைதிகளாக உக்ரைன் அரசு பிடித்து வைத்துள்ளது என ரஷ்ய அதிபர் புடின் தெரிவித்துள்ளார்.

ரஷ்ய ஜனாதிபதி தொலைக்காட்சி ஒன்றில் உரையாற்றியபோதே இதனைத் தெரிவித்துள்ளார்.

கார்கிவ் ரயில் நிலையத்தில் 3ஆயிரத்து 179 இந்திய மாணவர்கள் உட்பட பல வெளிநாட்டவர்கள் பிடித்து வைக்கப்பட்டுள்ளனர். கார்கிவிலிருந்து வெளியேற விரும்பிய சீன நாட்டவர் மீது உக்ரைன் படைகள் தாக்குதல் மேற்கொண்டன.

உக்ரைன் தற்போது வெளிநாட்டவரை பணயக் கைதிகளாகப் பிடித்து வைக்க ஆரம்பித்துள்ளது- என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)



செயற்கைக்கோள் மூலம் உக்ரைன் போரின் கோரக்காட்சி......

# சமூகவலைத்தளங்கள் ரஷ்யாவில் முடக்கம்



மொஸ்கோ, மார்ச் 5

ரஷ்யாவில் பேஸ்புக் உள்ளிட்ட சமூக வலைத்தளங்கள் பல இடங்களில் முடக்கம் செய்யப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

உக்ரைன் மீது மும்முனைத் தாக்குதல்களைத் தீவிரப்படுத்தி வரும் ரஷ்யாவை உலக நாடுகள் தனிமைப்படுத்தினாலும், ரஷ்யா கண்டு கொள்ளாமல் தனது தாக்குதல்களை தொடர்ந்து நடத்தி வருகிறது. இந்த நிலையில், ரஷ்யாவில் பேஸ்புக் உள்ளிட்ட சமூக வலைத்தளங்கள் பல இடங்களில் முடக்கம் செய்யப்பட்டுள்ளன.

உக்ரைன் போருக்கு எதிரான எதிர்ப்புக் கருத்துகள் சமூக வலைத்தளங்களில் தொடர்ந்து எழுந்து வருவதால் ரஷ்யா இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# உக்ரைனிலிருந்து 10 லட்சம் அகதிகள்

## ஐ.நா. கவலை



ரஷ்யாவின் படையெடுப்பு உக்ரைனில் 8ஆவது நாளாக தீவிரமடைந்து வரும் நிலையில் உக்ரைனிலிருந்து 10 லட்சம் பேர் வெளியேறியுள்ளனர் எனவும் இந்த நூற்றாண்டின் பெரும் அகதிகள் வெளியேற்றமாக இது அமைந்துள்ளதாகவும் ஐ.நா. கவலை வெளியிட்டுள்ளது.

இதனை ஐ.நா. உயர் ஆணையாளர் பிலிப்போ கிராண்டி தனது ருவிற்றர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: ரஷ்யாவின் படையெடுப்பால் உக்ரைன் மக்கள் உயிரைக் காத்துக் கொள்ள வெளியேறி அண்டை நாடுகளில் தஞ்சமடைந்து வருகின்றனர். ஒரு வாரத்துக்குள் ரஷ்யாவின் ஆக்கிரமிப்பில் 10 லட்சம் பேர் அகதிகளாக வெளியேறியுள்ளனர். உக்ரைன் அகதிகள் அதிகபட்சமாக சுமார் 4.44 லட்சம் பேர் போலந்திலும், 1.16 லட்சம் பேர் ஹங்கேரியிலும் 79ஆயிரம் பேர் மால்டோவாவிலும் 69 ஆயிரம் பேர் ஐரோப்பிய நாடுகளிலும் 67ஆயிரம் பேர் செக்லோவாகியாவிலும் தஞ்சம் புகுந்துள்ளனர்- என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 28 . 07 . 1962 | 23 . 02 . 2012 |

## அமரர் ஸ்ரீதரன் சத்தியநேசன்

நிஜமாக நீங்கள் மறைந்து
பத்தாண்டுகள் ஆனதோ
நீங்கள் இல்லா மனை
பொலிவிழந்து போனதுவோ
உங்களை நினைத்து - தினம் தினம்
நாம் ஏங்கித் தவிக்கின்றோம்.
காலங்கள் ஓடிக்கடந்தாலும்
உங்களை எங்கள் உள்ளத்தில்
வைத்துப் பூஜிப்போம்.

நினைவுகளுடன்...

ப.ஈசன்
077 131 0245

*28,300 மெ.தொன்...*

300 மெற்றிக்தொன் டீசல் மற்றும் 9 ஆயிரம் மெற்றிக்தொன் ஜெட் எரிபொருளுடன் கப்பலொன்று நேற்று கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தது.

இந்தக் கொள்வனவுக்காக 39.3 மில்லியன் அமெரிக்க டொலர் மேற்படி நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. அத்துடன், 30 ஆயிரம் மெட்ரிக்தொன் உலை எண்ணெயுடன் நாளை பிறிதொரு கப்பலொன்று நாட்டை வந்தடையும். இதன் மொத்த அளவும் மின் உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படும் என்று எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது. (அ-ம)

*சுழிபுரம்...*

புரம் கொட்டடி பேரன் ஆலயத்துக்குப் பின்புறமாக உள்ள பகுதியில் இருந்து நேற்றுக் காலை சடலமொன்று மீட்கப்பட்டுள்ளது.

முகம் சிதைவடைந்த நிலையில் காணப்பட்ட அந்தச் சடலம் குறித்து வட்டுக்கோட்டை பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து குறித்த பகுதிக்கு வருகைதந்த பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில் சடலமாக மீட்கப்பட்டவர், சுழிபுரத்தைச் சேர்ந்த மாணிக்கம் பூமிபாலன் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இறப்புத் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-125-20)

## துயர் பகிர்கின்றோம்



நேற்று 04.03.2022 அகால மரணமடைந்த

**பரமேஸ்வரன் துலக்ஷன்**

அவர்களின் பிரிவினால் ஆழ்ந்த துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக் கின்றோம்.

பிரிவினால் துயருறும்
அரியாலை மதுரநாயகம் குடும்பத்தினர்

## கண்ணீர் அஞ்சலி



சங்க உறுப்பினர்
திருமதி தர்மினி பரமேஸ்வரன்
அவர்களின் பாசமிகு மகன்
**பரமேஸ்வரன் துலக்ஷன்**

அவர்கள் நேற்று 04.03.2022 இறைபதமடைந்தார். அன்னாரின் இழப் பினால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சேவையாளர் சங்கம்.
யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி.

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 17 - 11 - 1960 | 03 . 03 . 2022 |

## தங்கராசா ஸ்ரீதர்

**(ஸ்கைறோஸ் உரிமையாளர்)**

புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் இந்தியா பாண்டிச்சேரியில் தற்காலிகமாக வசித்து வந்தவரும் தற்போது யாழ்ப்பாணம் கொட்டடியை வசிப்பிடமாகவும் கொண்ட தங்கராசா ஸ்ரீதர் (ஸ்கைறோஸ் உரிமையாளர்) அவர்கள் நேற்றுமுன்தினம் (03.03.2022) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கராசா புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், சுபத்திரா அவர்களின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற பொன்னையா அன்னபூரணி தம்பதியரின் அன்பு மருமகனும், கௌதமன், பவித்திரன், அகிலன் ஆகியோரின் அன்புத்தந்தையும், சுகன்சிகா அவர்களின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற சுசிலா மற்றும் வக்சலா ஆகியோரின் அன்புச்சகோதரனும், காலஞ்சென்ற ராஜகுலசிங்கம் மற்றும் சந்திரதயன் காலஞ்சென்ற பாலாம்பிகை மற்றும் சுந்தரலிங்கம், கமலாம்பிகை, சுந்தராம்பாள், புதுமைலோலன், சுமந்திராதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும், தர்மலிங்கம், நடனசோதி, தங்கராசா, ஆலாலசுந்தரம், தவசோதி, சிவலோகநாதன் ஆகியோரின் சகலனும், இராஜபிரசாத், பிரியங்கன், சுங்கீரனா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.03.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வைரவர் கோவில்,
கடற்கரைவீதி ஒழுங்கை,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 153 6914

(CS 18703) (4/6)

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 06 - 03 - 1998 | 04 - 03 - 2022 |

## பரமேஸ்வரன் துலக்ஷன்

**(யா/பரியோவான் கல்லூரி பழைய மாணவன்)**

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பரமேஸ்வரன் துலக்ஷன் அவர்கள் நேற்று (04.03.2022) வெள்ளிக்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் பரமேஸ்வரன் தர்மினி தம்பதியரின் பாசமிகு மகனும், ராஜினி (குடும்ப நல உத்தியோகத்தர் - மாங்குளம்), ஷாலினி (லண்டன்) ஆகியோரின் அன்புச்சகோதரனும், திருலோகநாதன் (லண்டன்), விஜயகுமார் (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், மாவட்ட செயலகம்- மன்னார்), மங்களேஸ்வரி, சரோஜா, அருளம்மா, குணநேசம், கெங்கேஸ்வரி ஆகியோரின் பாசமிகு மருமகனும், சுந்தரலிங்கம், காலஞ்சென்ற கேசவமூர்த்தி ஆகியோரின் பெறாமகனும், உதயராஜன் (விற்பனை நிறைவேற்று அதிகாரி- வடமாகாணம்).கஜீபன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், ரித்திக்ஷாய், டவீன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற பண்டிதர் மற்றும் செல்வராணி தம்பதியரினதும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை மற்றும் சரஸ்வதி தம்பதிகளின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.03.2022) சனிக்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

127 கனகரட்ணம் வீதி, அரியாலை.
077 415 4822, 077 370 8105

(CS.18704) (4/6)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாவை கொல்லங்கலட்டி கேணிக்கரை ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம் புனருத்தாரணசபை விஷேட பொதுக்கூட்டம்

❖காலம் :- 13/03/2022 ஞாயிற்றுக்கிழமை
❖நேரம் :- முற்பகல் 10.00 மணி
❖இடம் :- வீரகத்தி விநாயகர் ஆலய முன்றல்
❖தலைவர்:- திரு.சி.சொரூபன் (புனருத்தாரண சபை)

**கூட்டத்தில் கலந்துரையாடப்படும் விடயங்கள்**

01. புனருத்தாரண சபை யாப்பு மாற்றம்

யாப்பு கோவில் அறிவித்தல் பலகையில் பார்வையிடலாம் மற்றும் தேவையானவர்கள் ஆலயச்சிவாச்சாரியாரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

02. மண்டபம் தொடர்பான விடயம்

இந்த நிகழ்வில் உபயகாரர்கள் மற்றும் அடியார்கள் சுகாதார விதிமுறைகளை பேணி வருகை தந்து கருத்துக்கள், ஆலோசனைகள் வழங்க வேண்டும் என அன்புடன் அழைக்கின்றோம்.

திருமதி.ச.பாமினி
செயலாளர்
(புனருத்தாரண சபை)

## தவறவிடப்பட்டது

ஆறுகால்மடச் சந்திக்கும் நட்டாதெரு சந்திக்குமிடையில் கடந்த 03.03.2022 வியாழக்கிழமை 2 1/2 பவுண் Necklace (நெக்லெஸ்) ஒன்று தவறிவிடப்பட்டது. கண்டெடுத்தவர்கள் யாரும் இருப்பின் எம்மிடம் ஒப்படைக்கவும். உங்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்

(cs18690(2/6))

076 067 9699, 077 566 6206

## திறப்பு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 5

முத்தையா இராஜேஸ்வரி ஞாபகார்த்த கல்வியங்காடு ஞான பாஸ்கரோதய சங்க உள்ளக விளையாட்டரங்கு திறப்பு விழா நாளை மாலை 5.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. பா.சத்தியன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், யாழ். மாவட்டச் செயலர் க.மகேசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (ஓ-5)

## வேலையாள்கள் தேவை

புதிதாக ஆரம்பிக்கப்படும் மொத்த சில்லறை விற்பனை நிலையத்திற்கு கணக்காளர் மற்றும் உதவியாளர் தேவை.

(CS43326) (3/6)

தொடர்புக்கு: 077 322 2834

## வேலையாள்கள் தேவை

நெல்லியடியில் அமைந்துள்ள உணவு கையாளும் நிறுவனம் ஒன்றிற்கு ஆண் வேலையாட்கள் தேவைப்படுகின்றனர். ஆர்வம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும். வயது எல்லை 18 தொடக்கம் 30 வரை

(CS 18218) (3/6)

074 2910759

## மரண அறிவித்தல்

### தம்பாபிள்ளை ஜெகதீஸ்வரன்

**(St.Patrick's college 89th batch)**



தோற்றம் 20.11.1970 மறைவு 12.02.2022

யாழ்ப்பாணம், பாடசாலை ஒழுங்கை (School Lane) தாவடியைப் பிறப்பிடமாகவும், Harrow, London ஐ வசிப்பிடமாகவும் கொண்ட திரு. தம்பாபிள்ளை ஜெகதீஸ்வரன் அவர்கள் ( 12- 02-2022) அன்று இயற்கை எய்தினார்.

அன்னார் காலம் சென்ற தம்பாபிள்ளை, மகேந்திரராணி (நீலா) தம்பதியரின் அன்பு மகனும், இராஜராஜேஸ்வரி (மங்கை), அவர்களின் பெறாமகனும், கெங்காதரன் (இலங்கை), கெங்காதேவி (Canada), ஈசு (Canada), ஆகியோரின் தம்பியும், கருணாகரன்(UK), பிரபாகரன் (UK), பிரபாலினி (Malasiya) ஆகியோரின் சின்னண்ணாவும் ஜெயந்தி, சுபாஸ்கரன், துஜி, முகுந்தினி, கணேசன், ஆகியோரின் அன்பு மைத்துனரும், லக்ஷன், சிந்து, வைதேகி, யாதவி, ஆகியோரின் சித்தப்பாவும் தர்மிக்கா, கௌசிக்கா குகன், திபிக்கா, கவின், நிலவன், கதிரவன், ஹரேந்திரா ஆகியோரின் தாய்மாமனாரும், மறவன், மாசிலன், அன்னை ஆகியோரின் பெரியப்பாவும் வெண்ணிலாவின் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.03.2022) ஞாயிற்றுக்கிழமை Barnet Multicultural Community Centre, Algernon Road, London, NW4 3TA முற்பகல் 11.30 நடைபெற்று, புகவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 1.30 மணிக்கு Hendon Crematorium, Holders Hill Road, Mill Hill, London, NW7 1NB இற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

**தகவல்**
கருணாகரன்:- (UK) 0044-7944308488
ஈசு - (Canada):- 001-647985-1941
தாய் - ( Malasiya):- 0060-18389 3498
கு. ஜெயந்தன் (மங்களா காட்சியறை):- 0777286069

(CS 18696) (4/6)

## 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 18 . 05 . 1982



மறைவு 05 . 03 . 2008

### செல்வன் இராசேந்திரம் கருணாகரர்

(யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவன், முன்னாள் முகாமைத்துவ உதவியாளர், மாவட்ட செயலகம் – வவுனியா)

ஆண்டுகள் பல ஓடினாலும்
உங்கள் நினைவுகள் மாறாது மகனே
இறுதிவரை துணையிருப்பாய் என்று எண்ணியிருந்தோம்
எங்களைப் பாதியில் பரிதவிக்கவிட்டு ஓழமறைந்தாயோ
அன்பான உன் வார்த்தை அயராது
எங்கள் செவியில் ஒலிக்கிறது மகனே

சதுமலை தெற்கு, மானிப்பாய். (CS 18650) (3/6) உன் பிரிவால் வாடும் பெற்றோர்

## சிறுமியுடன் உல்லாசம்: இளைஞர் கைதானார்


யாழ். மார்ச் 5

14 வயதுச் சிறுமியுடன் உல்லாசமாக இருந்த 20 வயதுடைய இளைஞர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார். இந்தச் சம்பவம் புத்தூர் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சிறுமியின் பெற்றோர் வழங்கிய முறைப்பாட்டுக்கு அமைய வே குறித்த இளைஞன் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட இளைஞனையும், சிறுமியையும் சட்ட மருத்துவ அதிகாரியிடம் முற்படுத்தி மருத்துவப் பரிசோதனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ-ம-23)

## மரண அறிவித்தல்

தோற்றம் 10 . 07 . 1946



மறைவு 02 . 03 . 2022

### ஆறுமுகம் வீரவாகு

கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும், தற்போது ஜேர்மனியில் வசித்து வந்தவருமான ஆறுமுகம் வீரவாகு அவர்கள் கடந்த (02.03.2022) அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் Beerdigung Am 08.03.2022 - 12:00-14:00 Uhr Friedhof in Bielefeld - Sennefriedhof Brackweder Str.80, 33647 Bielefeld ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கந்தரோடை.

தகவல்:
தங்கராசா திலீபன்
077 6139 289

## மரண அறிவித்தல்

பிறப்பு 19 - 04 - 1953



இறப்பு 02 . 03 . 2022

### வேலுப்பிள்ளை சிற்றம்பலம்

கைதடி வடக்கைப் பிறப்பிடமாகவும் பாறினை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சிற்றம்பலம் கடந்த (02.03.2022) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், கதிர்காமநாதன் மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகனும், கௌரிமாலாவின் அன்புக்கணவரும், கௌசல்யா, குருபரன் (கனடா), ஹரிகரன் ஆகியோரின் பாசமிகு தந்தை -யும், பொன்னம்பலம், மகேஸ்வரி (திலகம்), பேரம்பலம், பரமேஸ்வரி, காலஞ்சென்ற இராஜேஸ்வரி (பிரான்ஸ்), மற்றும் நகுலேஸ்வரி (சுவீடன்) ஆகியோரின் அன்புச்சகோதரனும், நகுலேஸ்வரன் (அமெரிக்கா), ஜெகதீஸ்வரன், நந்தினி (கனடா), ஜெயந்தினி (கனடா), ஜெயகௌரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.03.2022) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அஸ்கர் இந்துமயானத்திற்கு (பாறின்) எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
மனைவி பாறின்
கௌசல்யா
தொ.இ:- 00973 39536818

வே.பேரம்பலம்
கைதடி வடக்கு,கைதடி
தொ.இ:- 077 714 6109

(CS 18692) (4/6)

## இரு நூல்கள் அறிமுக விழா

இணுவில் அறிவாலயத்தின் அனுசரணையில் சர்வானந்தமயபீடம் நடத்தும் இரு நூல்கள் அறிமுக விழா, இணுவில் அறிவாலய மண்டபத்தில் இன்று காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கோப்பாய் சிவம் எழுதிய, தமிழரசர் காலம் முதல் 2020ஆம் ஆண்டு வரை வாழ்ந்து மறைந்த பெரியோர்களின் வரலாற்று ஆவணத் தொகுப்பான, 'ஈழத்தின் புகழ்பூத்த பூசுரர்கள்', சம்ஸ்கிருத ஸ்வபோதினி ஆகிய நூல்களே இவ்வாறு அறிமுகம் பெறுகின்றன. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# INVITATION FOR BIDS
# JAFFNA COLLEGE, VADDUKODDAI

1. **The Chairman, Procurement Committee - Jaffna College, Vaddukoddai** now invites sealed bids from eligible and qualified bidders for the building renovation works described in the table below.

| Description of Work | Estimated Cost (Million Rs.) | Construction Period | Required CIDA grade | Bid Security (Rs.) & Validity up to |
|---|---|---|---|---|
| Renovation and Rectification Work to the Primary School Building, Ottley Hall and YMCA Block at Jaffna College. Contract No: JC/BLDG/2022/01 | 17.00 | 150 days | C6 and above (Building Works) | 170,000.00 06.07.2022 |

2. Interested eligible bidders may obtain further information from **Principal Office, Jaffna College, Vaddukoddai**, (Tel.: 0212250888, Email:1823jaffnacollege@gmail.com) and inspect the Procurement Documents thereon any working days from **07.30 Hrs** to **14.00 Hrs**.
3. To be eligible for Contract award the successful bidders shall not have been blacklisted and shall meet the **CIDA** registration and qualification requirements listed above. Additional details and work experience requirements are provided in the Procurement Documents.
4. A complete set of Procurement Documents in the English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Principal, Jaffna College, Vaddukoddai** from **7th March 2022** until **21st March 2022** from **7.30 Hrs** to **14.00 Hrs** on working days upon payment of non-refundable fees of Rupees **Two Thousand** (**Rs.2000.00** excluding VAT) for a set. The method of payment will be cash.
5. Bids (Original and Duplicate) must be delivered to the **Chairman, Procurement Committee - Jaffna College**, Jaffna College, Vaddukoddai on or before **12.00 Hrs** on **22nd March 2022**. Late Bids will be rejected. Bids will be opened soon after the closing in the presence of the bidders or their authorized representatives who choose to attend.
6. All Bids shall be accompanied by a Bid Security for an amount mentioned in the above table and it shall be obtained from recognized organization. The Bid Security should be valid up to **21st June 2022.**
7. Pre-bid meeting will be held at the **Jaffna College, Vaddukoddai** commencing at **09.30 Hrs** on **17.03.2022.**
8. Decision of Procurement Committee of Jaffna College shall be the final.

**The Chairman**
**Procurement Committee - Jaffna College**
**Vaddukoddai**
**05.03.2021**

(CR 37177) 1-6

# பெறுகை அறிவித்தல்.
# நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்.

01. தவிசாளர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில் தகுதி வாய்ந்த ஒப்பந்த காரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோரப்படுகின்றது.
02. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
03. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக்கொள்ளப்படாத வராகவும், அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகவும் இருத்தல் வேண்டும்.
04. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தவிசாளர், நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில், (தொலைபேசி இலக்கங்கள்.021-222-2700, பக்ஸ் இல 021-222-0138 e.mail – npsnallur@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் 05.03.2022 திகதியிலிருந்து 17.03.2022 ம் திகதி வரை மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் மாலை 16.00 மணி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப் புலம் வீதி, கொக்குவில் எனும் இடத்திலிருந்து 05.03.2022 ம் திகதியிலிருந்து 17.03.2022 ம் திகதி வரை காலை 09.00 மணிக் கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.1000/- (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ள லாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
06. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தவிசாளர், நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில், எனும் முகவரிக்கு 18.03.2022 ம் திகதி காலை 11.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர், அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். கிடைக்கப்பெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியின் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வதற்கு அல்லது இப் பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைக் குழுவிற்கு அதிகாரமுண்டு.
07. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 60 (அறுபது) நாட்கள் (17.05.2022) வரையும் செல்லுபடி யாகும்.
08. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.
09. கேள்வி முன்னாயத்த கூட்டம் 11.03.2022 வெள்ளிக்கிழமை மு.ப 11.00 மணிக்கு சபையின் கலந்துரையாடல் மண்டபத்தில் இடம்பெறும்.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை Rs.Mn(Vat நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | மீளளிக்கும் பிணை வைப்பு (Rs) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/41/(10)/Acc/Proc/Street Light-2022 | வீதி விளக்குகள் கொள்வனவு செய்தல் (LED-100Watts, 50Watts) | 3. 3 | 15 நாட்கள் | வடக்கு மாகாண சபை / மாவட்ட செயலகம் / நல்லூர் பிரதேச சபையில் வழங்குனராக பதிவு செய்யப்பட்ட நிறுவனமாக இருத்தல் | 50,000.00 | 14.06.2022 |

**தவிசாளர்,**
**நல்லூர் பிரதேச சபை.**
**05.03.2022**

(cr.37191) (2.6)

# வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிறுவனத்திற்கு வேலையாள்கள் தேவை.

- **மேசன் - 2000/-**
- **மேசன் உதவியாளர் - 1500/-**
- **வெல்டர் - 1500/- - 2000/-**
- **வயரிங் பிளமிங் வேலை தெரிந்தவர்கள் - 1500/- - 2000/-**
- **தச்சுவேலை 1500/- - 2000/-**

**தொடர்புகளுக்கு : 076 058 6677**
**8.30 am - 6.00 pm தொடர்பு கொள்ளவும்**

(CS 43338) (3/6)

# கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாண மாவட்ட செயலக தாபன கிளையில் அலுவலக அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் **திரு.க.கோமகன்** அவர்களின் பாசமிகு தாயார்

## கந்தசாமி அற்புதராணி

அவர்கள் கடந்த 02.03.2022 ஆந் திகதி புதன்கிழமை அன்று இறைபதம் அடைந்து விட்டார். அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் அவரது பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**நலன்புரிக்கழகம், மாவட்டச்செயலகம், யாழ்ப்பாணம்.**

(cr.37189) (2.6)

# துயர் பகிர்கின்றோம்

பிறப்பு 24 . 01 . 1964



இறப்பு 03 . 03 . 2022

எமது கல்லூரியின் மூத்த விரிவுரையாளர்

## கனகசபை பாஸ்கரன்

அவர்கள் 03.03.2022 அன்று இறைபதமடைந்து விட்டார்

நிலையில்லா வாழ்வினிலே
நெஞ்சமதில் நீங்கா
நினைவுகளை பதித்துவிட்டு
பாசம் காட்டிய உறவுகளை
பரிதவிக்க வைத்து விட்டு
மறைந் தாயே!

அமரர் க.பாஸ்கரன் அவர்களின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத் தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**கல்வி சாரா ஊழியர்கள் நலன்புரிசங்கம்,**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி**
**கோப்பாய்**

(CS 43336)(3/6)

# 31ஆம் நாள் நினைவலைகள்...

அன்னை மடியில் 15 . 07 . 1943



ஆண்டவன் அடியில் 30 . 01 . 2022

**அமரர் கலாபூசணம் கலைச்சிகரம்**
**பிரபல விஷகடி வைத்தியர்**

## சண்முகம் பஞ்சாட்சரம்

(ஓய்வு பெற்ற விற்பனைத் திணைக்கள ஊழியர் )

திதி : அபரபக்க திரயோதசி

எங்களை அன்பு பாசத்துடன் அரவணைத்து
ஆதரவு தந்து காத்த தந்தையே
எங்களுக்கு நல்வழி காட்டி நிதம்
இப்புவியில் நல்வாழ்வுக்காகப் பாடுபட்டு
எங்களைச் சகலதும் பெறவைத்த தந்தையே
எமைப் பிரிந்து திங்களொன்று ஆனாதென்ன
இங்கு எத்தனை ஆண்டுகள் வரினும்
உங்கள் நினைவுகள் என்றும் அழியாது!

39, வேலப்பர் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

நினைவுகளுடன்
குடும்ப உறவுகள்

(CS 18681) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கணபதி துணை

அரியாலை, நீர்நொச்சித்தாழ்பு

## ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானம்

ARIYALAI NEERNOCHCHITHALVU SRI SITHIVINAYAKAR TEMPLE

Ariyalai, Jaffna, Sri lanka. T.P.: 021 221 5461 அரியாலை, யாழ்ப்பாணம், இலங்கை.

பதிவு இல. HA /5/JA /218

தலைவர் / President பொருளாளர் / Treasurer செயலாளர் / Secretary

## ஆலய காணிகளை குத்தகைக்கு பெற்றவர்களுக்கான அறிவித்தல்

எமது தேவஸ்தானத்திற்கு உரித்துடைய, யாழ். மாநகர சபை, நல்லூர் பிரதேச சபைகளுக்கு உட்பட்ட பால வளவு, வடலிவளவு, வைபிரவர்கோவிலடி, நாவலடி, கிழக்கு அரியாலை ஆகிய இடங்களில் முன்னைய நிர்வாகம் / தர்மகர்த்தாவினால் குடியிருப்பதற்காக வழங்கப்பட்ட காணிகளின் உரிமையாளர்கள் எதிர்வரும் 31.08.2022 திகதிக்கு முன்னர் தங்களுக்கு வழங் கப்பட்ட காணிகளில் குடியிருக்க தவறும்பட்சத்தில் இவ் ஆதனங்களை ஆலய நிர்வாகம் மீளவும் கையகப்படுத்தும் என்பதை அறியத் தருவதுடன், 2021 ஆம் ஆண்டுக்கான குத்தகைப்பணத் தினை செலுத்தாதவர்கள் எதிர்வரும் 31.05.2022 திகதிக்கு முன்னர் குத்தகைப் பணத்தை செலுத்தும்படி இத்தால் அறியத்தருகின்றோம். இவ் அறிவித்தல் 09.01.2022 திகதி நடைபெற்ற நிர்வாக சபைக் கூட்ட தீர்மானத்திற்கு அமைவாக பிரசுரக்கப்படுகிறது.

சு.கனகலிங்கம், தலைவர், நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானம், அரியாலை.

கு.ரகுகாந்தன் செயலாளர், நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானம், அரியாலை.

(cs.43328) (2.6)

## தவறவிடப்பட்டுள்ளது

பளையில் இருந்து யாழ்ப்பாணம் வரும் தனியார் பேரூந்தில் **ஜெகதீஸ்வரன் ஜெனிஸ்ரன்** என்பவரின் தேசிய அடையாள அட்டை (200435400683) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ் உள்ள தொலைபேசி இலக்கத்திற்கு தகவல் தரவும்.

தொடர்பு : 076 564 7434

(CS 43335) (3/6)

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ். நகரில் இருந்து இரண்டு மைல் சுற்றாடலில் சிறிய வீடு வாடகைக்கும் அதே சுற்றாடலில் சிறிய வீடு விலைக்கும் தேவை.

(CS 43333) (3/6) 076 183 8476, 021 222 7535



## நல்லூர்க் கந்தன் திருமண சேவை

எல்லா மதம், இனம்,வெளிநாடு, உள்நாடு ஆகிய சகல திருமணங்களும் எம்மால் ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்

077 973 3183 வி.ஜெயந்தி

பருத்தித்துறை வீதி, நல்லூர், MC அருகில் யாழ்ப்பாணம்.

(cs.43337) (2.6)

# மரண அறிவித்தல்

## திரு.திவாகரன் வாமதேவன்



தோற்றம் 04.02.1982 மறைவு 21.02.2022

யாழ். கோப்பாயைப் பிறப்பிடமாகவும், நெதர் லாந்து Amsterdam, கனடா Brampton ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட திவாகரன் வாமதேவன் அவர்கள் 21-02-2022 திங்கட்கிழமை அன்று இறை வனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவகுரு சோதி தம்பதிகள், காலஞ்சென்றவர்களான தம்பிஐயா தவமணி தம்பதிகளின் அன்புப் பேரனும், வாமதேவன் யோகராணி தம்பதி களின் அன்பு மகனும், பரமநாதன் கமலா தேவி தம்பதிகளின் அன்பு மருமகனும், சாருஜா அவர்களின் பாசமிகு கணவரும், இனியா, சான்றோன், காவியா ஆகியோரின் அன்புத் தந்தையும், தாமோதரன், சியாமினி, தர்சிகா ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஆதிரா, ஆத்மிகன் ஆகியோரின் ஆசைப் பெரியப்பாவும், பிரணயா, நிலா, ஆரபி ஆகி யோரின் அன்பு மாமாவும், சண்முகலிங்கம் - சத்தியராணி, சிவகாந்தன்- உமாராணி ஆகியோரின் பெறாமகனும், தயாபரன் - தாரணி, தவலோஜன்- கலாநிதி, ராஜ்மோகன், விஜயமோகன்- பிரவீணா, இராஜேஸ்வரி ஆகியோரின் பாசமிகு மருமகனும், சரண்யன், கீர்த்தனா, செந்தூரன், தவசீலன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், கிரிஜன், கீர்த்திகா, இமயவர்மன், மெலனி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும், தனுஜன், திவ்யா, தருண், சுவர்ணா, சாதுஜன், ஆகனா, ஆதவன், ஆருத்ரன், மலர்விழி, தர்சினி, கேமா, கீதா, லோகச்சந்திரன் ஆகியோரின் அன்பு மச்சானும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.03.2022) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இராசவீதி, கோப்பாய் மத்தி, கோப்பாய்.

(sha .685) (2.6)

தகவல்: குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

பிறப்பு 29 . 04 . 1943



இறப்பு 28 . 02 . 2022

## கந்தையா நாகம்மா

காரைநகரைப் பிறப்பிடமாகவும் தலையாழி கிழக்கு, கொக்குவிலை வசிப்பிட மாகவும் கொண்ட கந்தையா நாகம்மா கடந்த (28.02.2022) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் பார்வதி தம்பதியரின் அன்பு மகளும், விஸ்வநாதர் கந்தையாவின் பாசமிகு மனைவியும், தேவதாஸ், மோகனாம்பாள், சிவயோகேஸ்வரி, சரோஜாதேவி, முருகதாஸ், காலஞ்சென்ற கிருஷ்ணதாஸ் மற்றும் கயனதாஸ் ஆகியோரின் அன்புத்தாயாரும், கந்தசாமி, காத்தியேசு, பரமசாமி, நாகேஸ்வரி, வேலுப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும், சரோஜினிதேவி, கனகரத்தினம், அருணகிரிநாதன் (ஆனந்தன்), சிவரஞ்ஜிதன், தேவகுஞ்சரி, கவிதா ஆகியோரின் மாமியாரும், அமலா, ரிஷோ, நுரியன், டிவாஷன், தர்ஷன், தனுஷா, துளசிகா, சிவசந்துரு, சாங்கவி, ராகவன், அச்சு, அஸ்விதா, பத்மேஸ் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.03.2022) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் காரைநகர் களபூமி தில்லைமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அச்சுக்கூட ஒழுங்கை, தலையாழி கிழக்கு, கொக்குவில்.

(CS 18633) (4/6)

தகவல்: குடும்பத்தினர் (V.S கந்தையா)

# தசாக கிருஹயக்ஞ அழைப்பு



நிகழும் பிலவ வருடம் மாசி மாதம் 14ஆம் நாள் (26.02.2022) சனிக் கிழமை பிற்பகல் கிருஸ்ணபக்ஷ ஏகாதசி திதியில் சிவனடி அடைந்த எமது குடும்பத் தாயார்

ஸ்ரீவத்ச கோத்திரம்

## திருமதி வல்லபாதேவி பரமேஸ்வரசர்மா

அவர்களின் ஆத்ம சாந்திக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

| | |
|---|---|
| தசாகம் | 07.03.2022 திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணி |
| ஏகாதிஷ்டம் மாசியம் | 08.03.2022 செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணி |
| சபிண்டீகரணம் | 09.03.2022 புதன்கிழமை முற்பகல் 11.00 மணி |
| கிருஹயக்ஞம் சமாராதனை மதியபோசனம் | 10.03.2022 வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணி |

மேற்படி கிரியைகளில் கலந்து அன்னாரின் ஆத்மசாந்திக்காய் பிரார்த்தனை செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

குடும்பத்தினர்.


கற்பகக்கோணை, பிள்ளையார் கோவிலடி, உடுவில் சுன்னாகம்

(CS 43284) (3/6) T.P : 077 168 6118, 077 110 2939

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சொல்லொணாத் துயருடன் கல்வியியலின் கண்ணீர்..!

மலர்வு
24 - 01 - 1964



உதிர்வு
03 - 03 - 2022

## அமரர் கனகசபை பாஸ்கரன்

( தொடருறு கல்விக்கான விரிவுரை இணைப்பாளர், சிரேஷ்ட விரிவுரையாளர்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி)

கல்லூரிப் புலர்வில் ஒளிதந்த சூரியா!
வல்லமை ஒளியாய் வலம்வந்த பாஸ்கரா!!
மின்னலற்ற கொடு இடியாய் – உன்
திண்ண உடல் சாய்ந்ததோ....
உன்னதனே, உள்ளழகே – உன்
வண்ணமிங்கு ஓய்ந்ததோ!
பின்னமற்ற இளவழகே!
அண்ணலே உன் இழப்பால்,
அடி நெஞ்சம் துடிதுடிக்க
இடி தாங்கி ஒடிகின்றோம்....!

செம்மைகளை வரையறுத்த
உண்மை மிகு உதாரணனே,
கடமையுணர்வு, கட்டுப்பாடு
துடிப்பு நடை, தூய உடை
கடவுள் பக்தி, கறையில்லாப் பணி...
இருபது வருடம் மேல் உரமான பணி நகர்வில்
கரம் தந்த காத்திரனே,
தொடருறு கல்வியில் தடம் பதித்த திடமே,
ஏற்றமே ஊற்றாக ஆற்றல் தந்த அற்புதனே!
போற்றுகின்றோம் உன் பொன்னடியை

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**கல்லூரிச் சமூகம்**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி**

(CS 43339 (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடும்ப...

அரச பங்காளிக்கட்சிகளின் தலைவர்கள் இணைந்து கொழும்பில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே விமல் வீரவன்ஸ இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

'2019 ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவே பஸில் ராஜபக்ச திட்டமிட்டிருந்தார். அதற்காக பொதுஜன பெரமுன கட்சியை முழுமையாகப் பயன்படுத்தினார். இதனை நாம் ஏற்கவில்லை. மஹிந்த சூறாவளியை ஆரம்பித்த பிரதான தரப்புகள், மஹிந்த இல்லாவிட்டால், கோத்தாபய வேண்டும் என வலியுறுத்தின. இதனால் பஸிலின் ஜனாதிபதி கனவு தடைபட்டது. விருப்பமின்றியே கோத்தாபய ராஜபக்சவை களமிறக்க பஸில் சம்மதித்தார்.

2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ச தோல்வியடைந்த பின்னர், எதிர்க்கட்சித் தலைவர் பதவியை பஸில் கோரினார். அதனை மஹிந்த வழங்கவில்லை. இதனையடுத்து நாட்டைவிட்டு வெளியேறினார். அப்படிப்பட்ட ஒருவரை எப்படி ஜனாதிபதியாக்க முடியும். அதனால்தான் எம்மிடையே மோதல் ஏற்பட்டது. கிழக்கு துறைமுக விவகாரம், யுகதனவி, 20ஆவது திருத்தச்சட்டம் ஆகியவற்றின்போது இவை வெளிப்பட்டன. நாங்கள் இருந்தால் அமைச்சரவைக்கு வரமாட்டேன் என பஸில் கூறியுள்ளார். இதனைத் தடுப்பதற்கு, குடும்ப அழுத்தத்துக்கு பணிந்து ஜனாதிபதி எம்மை நீக்கியுள்ளார்' - என்றார். (அ-ம-44)

## ஏழரை...

முறைப்படுத்தப்படும் என்று பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி, நாளை காலை 8.30 மணி முதல் மாலை 5.30 மணி வரையான காலப்பகுதியில் 3 மணிநேர மின்வெட்டும், மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை ஒரு மணிநேர மின்வெட்டும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. (அ-ம)

## யுகதனவிக்கு...

மாற்றும் தீர்மானத்தை ரத்துச்செய்ய வேண்டும் எனக்கோரிய மனுக்களை விசாரணை செய்வதற்கு உயர்நீதிமன்றம் நேற்றுமுன்தினம் மறுத்துள்ளது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய மற்றும் டி.பி.தெஹிதெனிய, புவனேக அலுவிஹார, விஜித் மலல்கொட ஆகியோரைக் கொண்ட நீதியரசர் குழாம் முன்னிலையில் இந்த மனுக்கள் நேற்று விசாரணைக்கு வந்த நிலையில் அவை நிராகரிக்கப்பட்டன. (ம)

## ரயிலில்...

யைச் சேர்ந்த பரமேஸ்வரன் துலக்சன் (வயது -25) என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் கோவில் வீதிக்கு அருகே இடம்பெற்றுள்ளது. மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர், மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு ரயிலில் பாய்ந்து உயிரை மாய்த்துள்ளார் என்று முதற்கட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இறந்தவரின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டது. (அ-ம-27-9)

## அபிவிருத்தியை...

குழுவில் நான் பிரதமரின் நேரடிப் பணிப்பின்பேரில் நியமிக்கப்பட்டிருக்கின்றேனே தவிர ரீயும், வடையும் சாப்பிட்டுச் செல்வதற்கல்ல என்று தெரிவித்தார் யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப் குழுவில் பிரதமரின் இணைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள காசிலிங்கம் கீதநாத்.

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவரான அங்கஜன் இராமநாதன் முன்வைத்த கருத்துக்கள் தொடர்பில் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எனக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகார வரம்பென்பது பிரதமரூடாக நேராக அணுக வேண்டிய பிரச்சினைகளுக்குத் துரிதமான தீர்வைப் பெற்றுக்கொடுப்பதாகும். மாவட்டத்தின் அபிவிருத்திகளைத் துரிதப்படுத்தும் முகமாக பிரதமரின் நேரடிப் பணிப்பின் கீழேயே இந்தப்பதவி எனக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இதன் பலாபலன்களை வெகு விரைவில் அனைவரும் உணர்ந்து கொள்வார்கள். எமது பணி செயலில் காட்டுவதேயன்றி வாய்வீச்சில் காட்டுவதல்ல.

பிரதமரின் பெயரையோ பிரதமர் அலுவலகத்தின் பெயரையோ ஒருபோதும் நான் துஷ்பிரயோகப்படுத்துவதில்லை. பிரதமரின் தூர நோக்குத் திட்டங்களைச் செயலுருப்பெறச் செய்வதும் எமது அரசாங்கத்தின் கொள்கைத் திட்டங்களை மக்கள் மயப்படுத்துவதுமே எமது தலையாய கடமையாகும். இதற்கு அரசியல் சாயம் பூசநினைப்பது அவரவரின் தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சியேயன்றி வேறெதுவும் இல்லை. எனக்கு அரசியலுக்கு வர வேண்டிய எந்தவிதமான அவசியமுமோ விருப்பமோ அறவே இல்லை. அப்படியே அரசியலுக்கு வந்தாலும் நான் 'தவளை அரசியல்' செய்யமாட்டேன்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும், எக்காரணங்களுக்காகவும் அமைச்சர் நாமல் ராஜபக்ச என்னைப் பணி நீக்கவில்லை. என்னுடைய பதிவுத்திருமணம், திருமணம் உட்பட அனைத்து சுப நிகழ்வுகளிலும் முதலில் வந்து தனது வாழ்த்துகளையும் ஆசியையும் வழங்குபவர் அமைச்சர் நாமல் ராஜபக்ச தான். ஆகையினால் இதுவரை எமக்குள் எந்தவித கசப்புணர்வும் ஏற்பட்டதில்லை என்பதைப் பொறுப்புணர்வுடன் கூறிக்கொள்கிறேன்.

அர்த்தமற்ற , நகைப்புக்கிடமான குற்றச்சாட்டுக்களுக்கு பதில் வழங்கும் அளவுக்கு எனக்கு நேரமில்லை. என்மீது குற்றம் சாட்டுபவர் பிரதமரிடமும் ஜனாதிபதியிடமும் அமைச்சரிடமும் மாறிமாறி என்னைப் பற்றிப் பல்வேறு குற்றச் சாட்டுகளை முன்வைத்து வந்தார், வருகிறார், வருவார். அவருக்கு எனது வாழ்த்துகள் - என்றார். (அ-ம)

## பிரதமர்...

வரான அங்கஜன் இராமநாதன்.

நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் புதிதாக எவரும் நியமிக்கப்படவில்லை. யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் கலந்து கொள்வதற்கான பிரதமர் அலுவலக பிரதிநிதியொருவரின் பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அது தொடர்பான கடிதம் எமக்கு கிடைத்துள்ளது. எனவே யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில், புதிய நியமனமொன்று இடம்பெற்றுள்ளதாக வெளியாகிய அனைத்து செய்திகளும் பொய்யானவை. அத்தோடு, 'யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருக்கு எதிரான முறைப்பாடுகள் பிரதமர் அலுவலகத்துக்கு கிடைத்துள்ளன' என்ற அறிக்கையிடல்களும் ஒருசில சுயலாப ஊடகவியலாளர்களால் திட்டமிட்டு பரப்பப்படும் போலிச்செய்திகளே .

பிரதமரின் பிரதிநிதியாக கீதநாத் நியமிக்கப்பட்டால் அவர் மாவட்ட மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு ரீ, வடை சாப்பிட்டுவிட்டு போகலாம். வேறெதுவும் செய்ய முடியாது. பிரதமரின் இணைப்பாளரான கீதநாத் பிரதமர் அலுவலகத்தின் பெயரைப் பயன்படுத்தி அரசியல் செய்கின்றார். பிரதமர் அலுவலகத்தின் பெயரைத் தவறாகப் பயன்படுத்துகின்றார். அரசியல் ஆசை காரணமாகவே இவ்வாறான செயற்பாடுகளில் அவர் ஈடுபடுகின்றார்.

2013ஆம் ஆண்டு காலத்தில் கீதநாத், நாமல் ராஜபக்சவின் செயலராக கிளிநொச்சியில் நியமிக்கப்பட்டார். பின்னர் பணிநீக்கம் செய்யப்பட்டார். இந்தப் பதவி நீக்கத்துக்கான காரணத்தை அவரிடமே கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள். கடந்த பெப்ரவரி 20ஆம் திகதி கரவெட்டியில் சுதந்திரக் கட்சி நடத்திய கூட்டத்தின் எதிரொலியாகவே, கீதநாத் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் கலந்து கொள்ளும் பிரதமரின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ளார். கீதநாத் காசிலிங்கம் ஊடகங்களுக்கு, நியமனத்துக்கு அப்பாலான அரசியல் ரீதியான வியாக்கியானங்களைக் கொடுத்து பிரசுரிக்கச் சொல்லியுள்ளார்.

ஜனாதிபதியின் வேலைத் திட்டங்களை வேறு வகையில் தங்களது திட்டங்கள் என்று உரிமை கோருகின்றனர் என்று தெரிவித்து ஓர் அறிக்கையை கீதநாத் கடந்த காலங்களில் வெளியிட்டார். அதனை நாமல் ராஜபக்சவின் முகநூலிலும் பகிர்ந்திருந்தார். நான் நாமலிடம் பேசியபோது, அது தனது முகநூல் இல்லை என்று குறிப்பிட்டிருந்தார். கீதநாத் இவ்வாறு செயற்படும் ஒருவர்தான் - என்றார். (அ-ம)

## அமைச்சரவையை...

'நாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும், அமைச்சருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

அரச பங்காளிக்கட்சி தலைவர்களால் கொழும்பில் நேற்று நடத்தப்பட்ட ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

'விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோரை அமைச்சு பதவியில் இருந்து நீக்கியுள்ளமை தவறான முடிவாகும். முழு நாடுமே இந்ந நிலைப்பாட்டில்தான் உள்ளது. எனவே, இவர்கள் இருவருக்கும் நீதி கிடைக்கும்வரை என்னால், எனது அமைச்சுப் பணிகளை முன்னெடுக்க முடியாது. அமைச்சரவைக் கூட்டங்களில் பங்கேற்கவும் முடியாது.

நெருக்கடி நிலைமையில் இருந்து நாட்டை மீட்பதற்கான யோசனைத் திட்டத்தையே நாம் முன்வைத்தோம். சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்படும்போது, அதனை அணைத்தால்பிரச்சினைதீர்ந்துவிடுமா? அத்துடன், நாம் எதிரணியில் இணைய மாட்டோம் - என்றார். (அ-ம-44)

## எரிபொருள்,...

வங்கியின் நிதிச்சபை அரசாங்கத்துக்குப் பரிந்துரைத்துள்ளது.

நாடு எதிர்கொண்டுள்ள சவாலான பொருளாதாரச் சூழ்நிலைகளை சமாளிக்க ஒருங்கிணைந்த அணுகுமுறையை கடைப்பிடிப்பதை உறுதிசெய்ய சில நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று மத்திய வங்கி பரிந்துரைத்தது. அத்தியாவசியமற்ற மற்றும் அவசரமற்ற இறக்குமதிகளை அவசரமாகத் தடுக்கும் நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துதல், வெளிநாட்டுக்குப் பணம் அனுப்புதல் மற்றும் முதலீடுகளை மேலும் ஊக்குவித்தல் மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றலை நோக்கிய நகர்வை விரைவுபடுத்தும் அதேவேளையில் எரிசக்தி பாதுகாப்பு நடவடிக்கைகளை செயல்படுத்துதல் ஆகியவையும் அரசாங்கத்துக்கான பரிந்துரைகளில் அடங்கும்.

மத்திய வங்கி நாணயக் கொள்கை நிலைப்பாட்டை மேலும் கடுமையாக்கிய போது இந்தப் பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட்டன. நிலையான அடிப்படையில் பொருத்தமான வரி அதிகரிப்புகள் மூலம் அரசாங்க வருவாயை அதிகரிப்பது மற்றொரு பரிந்துரையாகும். அதன் மாதாந்த நாணயக் கொள்கை மீளாய்வு அறிக்கையை வெளியிட்ட மத்திய வங்கி, அவசர அடிப்படையில் வெளிநாட்டு நிதி மற்றும் கடன் அல்லாத அந்நிய செலாவணி வரவுகளை திரட்டவும், மூலோபாயமற்ற மற்றும் பயன்படுத்தப்படாத சொத்துக்களை பணமாக்குதல் மற்றும் அத்தியாவசியமற்ற மற்றும் அவசரமற்ற மூலதன திட்டங்களை ஒத்திவைக்கவும் பரிந்துரைத்தது. (ம)

## நீதிமன்றத்...

யில், இலங்கைக் கடலில் பிரவேசிக்கும் இந்திய மீனவர்களுக்கெதிராக நடவடிக்கை எடுப்பதற்குப் பொலிஸ்மா அதிபருக்கு பணிப்புரை வழங்கவேண்டுமென்று கோரி வடமாகாண மீனவர் சங்கங்களும், சுற்றாடல் நீதிக்கான நிலையமும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் எழுத்தாணை மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளன.

இந்த மனு மீதான அடுத்தகட்ட நடவடிக்கை மே மாதம் 5ஆம் திகதி முன்னெடுக்கப்படவுள்ளது.

இலங்கைக் கடலில் அனுமதியின்றிப் பிரவேசிக்கும் பல இழுவைப்படகுகள் சட்டவிரோத மீன்பிடி முறைகளைப் பயன்படுத்துவது இலங்கைமீன்பிடித்துறையில் பெரிய விவகாரமாக மாறியுள்ளதென்றும் மனுதாரர்கள் தெரிவித்தனர். இந்த அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைகள் இலங்கை மீனவர்களின் வாழ்வாதரத்தை அழித்து தேசிய மீன் உற்பத்தியையும் ஏற்றுமதி வருமானங்களையும் பாதித்து இலங்கைக் கடலில் செழுமையான வாழிடவியல் முறைமைகளையும் அழித்துவருகின்றன. அத்துடன் தேசியப் பாதுகாப்புக்கு ஓர் அச்சுறுத்தலாக விளங்குகின்றது - என்றும் மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

மீன்பிடித் திணைக்களம் மற்றும் நீரியல் மூலவளங்கள் நாயகம், மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் நீரியல் மூலவளங்கள் அமைச்சர் இலங்கைக் கடற்படைக் கட்டளைத் தளபதி, பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட பலர் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர். (அ-ம-ரி1)

## சுழல்...

காலங்களில் எதிரணிக்குத் துர்க்கனவாக விளங்கியவர் வோர்ண். 145 டெஸ்ட் ஆட்டங்களில் களமிறங்கிய வோர்ண் 708 இலக்குகளைக் கைப்பற்றியுள்ளார். 194 ஒருநாள் ஆட்டங்களில் களமிறங்கிய ஷேன் வோர்ண் 293 இலக்குகளைக் கைப்பற்றியுள்ளார்.

ஓய்வின் பின்னர் கிரிக்கெட் விமர்சகராகவும், வர்ணனையாளராகவும், சர்வதேசப் பத்திரிகைகளில் பத்தியெழுத்தாளராகவும் பணியாற்றிவந்த வோர்ண், தாய்லாந்தில் உள்ள தனது ஆடம்பர வீட்டில் தங்கியிருந்தபோது மாரடைப்பால் உயிரிழந்துள்ளார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### யாழ். துரையப்பா விளையாட்டரங்கில்

# வடக்கு மாகாண அணியுடன் தென்மாகாண அணி பலப்பரீட்சை

யாழ்ப்பாணம்,மார்ச் 5

**இலங்கை உதைபந்தாட்ட சங்கம் நடத்தும், மாகாணங்களுக்கிடையிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டி இன்று சனிக்கிழமை யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும்.**

இதில் வடமாகாண அணியை எதிர்த்து தென் மாகாண அணி போட்டியிடும். இலங்கையில் முதன்முறையாக இடம் பெறும் மாகாணங்களுக்கி டையிலான உதைபந்தாட்டப் போட்டியின் இறுதிப் போட்டி யாழ்ப்பாணத்தில் இடம்பெற வுள்ளது. வட மாகாணத்தைப் பிரதி நிதித் துவப்படுத்திய வீரரும், இலங்கை உதை பந்தாட்ட தேசிய அணி வீர ருமான டக்சன் பியூஸ் லஸ் இழப்பு எமக்கு அதிர்ச்சியைத் தந்துள்ளது. அவருக்குக் காணிக்கை செலுத்தும் முகமாக வட மாகாண உதை பந்தாட்ட அணி கிண்ணத்தைக் கைப்பற்றவேண் டும் என்று இலங்கை உதைபந்தாட் டச் சங்கத்தின் உப தலைவர் இமானு வேல் ஆனல்ட் தெரிவித்துள் ளார். (ஓ-4,20)

## 11 ஆயிரத்தை எட்டும் டெங்கு

கொழும்பு,மார்ச் 5

இந்த வருடத்தில் இது வரை 10 ஆயி ரத்துக்கும் மேற்பட்ட டெங்குத் தொற்றா ளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள னர். தொற்றுக்குள்ளான சிலர் பரிசோத னைகளை மேற்கொள்ளாது இருப்ப தால், இந்த எண்ணிக்கை மேலும் அதி கரிக்கக் கூடும் என்று டெங்குக் கட்டுப் பாட்டு அலகின் பணிப்பாளர் சுதத் சமர வீர தெரிவித்துள்ளார்.

இந்த வருடத்தின் ஜனவரி மாதத்தில் 7 ஆயிரத்து 702 பேரும், பெப்ரவரி மாதத் தில் 2 ஆயிரத்து 962 பேரும், மார்ச் மாதத்தில் கடந்த 3 நாள்களில் 156 பேரும் டெங்குத் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

இவர்களில் 60 வீதமானோர், மேல் மாகாணத்தைச் சேர்ந்தவர்கள். பொது மக்கள் குமட்டல், வாந்தி, தோல் சிவப்பு, கண், தசைநார், மூட்டுகால் மற்றும் எலும்புகளில் வலி போன்ற அறிகுறிகள் தென்படின் உடனடியாகவே மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொள்ள வேண் டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் 35 ஆயிரம் டெங்குத் தொற் றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-4,ரி)

## மேலும் இரு அமைச்சர்கள் நேற்றுப் பதவியேற்றனர்!

கொழும்பு, மார்ச் 5

சி.பி.ரத்நாயக்கா வனவளப் பாதுகாப்பு அமைச்சராகவும் திலும் அமுனுகம போக்குவரத்து அமைச்சராகவும் நேற்றுப் பதவியேற்றனர்.

அமைச்சுகளில் ஏற்படுத்தப்பட்ட மாற்றத்துக்கு அமையவே அவர்கள் இருவரும் பதவியேற்றனர். இரண்டு அமைச்சரவை அமைச்சர்களும் ஒரு இராஜாங்க அமைச்சருமே இவ்வாறு பதவியேற்றனர். தனது பதவியை இராஜினாமா செய்த அருந்திக பெர்னாண்டோ, மீண்டும் இராஜாங்க அமைச்சராகப் பதவியேற்றார். (ம)

### மன்னாரிலிருந்து...

விட்டு உடனடியாக வெளியேறவும் முடிவெடுத்துள்ளது.

மன்னார் பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில், மன்னார் நகர சபையின் கேட் போர் கூடத்தில் நேற்றுக்காலை இந்தக் கூட்டம் இடம்பெற்றது. மன்னாரில் கனிய மணல் அகழ்வுப் பணிகளை முன்னெடுக்கும் அவுஸ்திரேலிய நிறுவ னத்தின் பிரதிநிதிகள், பிரஜைகள் குழுவின் பிரதிநிதிகள், சூழலியல் ஆர்வ லர்கள், அருட்தந்தையர்கள், பொதுமக்கள் எனப் பலரும் இந்தக் கலந்து ரையாடலில் பங்கேற்றனர்.

இதன்போது மன்னார் மாவட்டத்தில் கனியமணல் அகழ்வு மேற்கொள்ளப் பட்டு வரும் நிலையில் மாவட்டத்தில் ஏற்படவுள்ள அபாய நிலை குறித்து கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. அத்துடன், குறித்த நிறுவனத்தினர் தமது அகழ்வுப் பணிகளை உடனடியாக நிறுத்த வேண்டும் ஒருமித்த குரலில் வலி யுறுத்தப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த அவுஸ்திரேலியா கனிய மணல் அகழ்வு நிறுவனத்தின் இலங்கைக்கான பொறுப் பாளர் சாலிய, மக்களின் பாதுகாப்புக்குத் தீங்கை ஏற்ப டுத்துகின்ற வகையில் குறித்த கனிய மணல் அகழ்வு இடம்பெறவில்லை. உரிய சட்டதிட்டங்களுக்கு அமைவா கவே இடம்பெற்று வருகின்றது. ஆயினும் மக்களின் எதிர்ப்பை மீறி அகழ்வுப் பணிகளை மேற்கொள்ள விரும் பவில்லை. அகழ்வுக்காக கொண்டுவந்த உபகரணங் களை எடுத்துக்கொண்டு உடனடியாக மன்னாரை விட்டு வெளியேறுகின்றோம் என்றார்.

இந்த முடிவுக்கு குறித்த கலந்துரை யாடலில் கலந்துகொண்ட அனை வரும் கரவொலி எழுப்பி தமது வரவேற்பைத் தெரிவித்தனர். (அ-ம-56)

## ரயில்முன் பாய்ந்து யுவதியொருவர் பலி

முல்லைத்தீவு, மார்ச் 5

முல்லைத்தீவு மாங்குளம் பகுதி யில் யுவதியொருவர் ரயிலில் பாய்ந்து உயிரிழந்துள்ளார். நேற்று நண்பகல் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

திருச்செல்வம் நிதர்சனா (வயது 21) என்ற யுவதியே இவ்வாறு உயி ரிழந்தவராவார். ஆடைத் தொழிற் சாலையில் பணியாற்றிவரும் குறித்த யுவதி, உடல்நலம் பாதிக் கப்பட்டு வீட்டில் இருந்துள்ளார். இந்த நிலையில் உறவினரின் வீட்டுக்குச் சென்றுவிட்டு வருவதா கச் சொல்லி வீட்டில் இருந்து புறப் பட்டுச் சென்றஅவர் இவ்வாறு தவறான முடிவெடுத்து உயிரிழந் தார் என்று முதல்கட்ட விசாரணை களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

**வீடு வாடகைக்கு**
யாழ். கச்சேரியில் வீடு வாடகைக்கு கொடுக்கப்படும். 1 BED ROOM, HALL, KITCHEN, TOILET
077 142 2846
(CS 18685) (3/6)

**சிகை அலங்கார நிலையம் வாடகைக்கு உண்டு**
பொன்னாலை வீதி, மானிப்பாயில் அமைந்துள்ள அனைத்து வசதிகளுடன் கூடிய சிகை அலங்கார நிலையம் (Salon) வாடகைக்கு விடப்படும்.
T.P: 077 9094 771

**காணி/ வீட்டுடன் காணி தேவை**
2 பரப்பிற்குள் அமைந்த காணி/ வீட்டுடன் காணி மாலு சந்தி, வதிரி சந்தி, இரும்பு மதவடி உட்பட்ட பகுதிக்குள் உடனடியாக தேவை.
077 586 3927

**வேலையாள்கள் தேவை**
நல்லூர் எல்லையில் இயங்கிவரும் Studio க்கு வேலை ஆட்கள் தேவை.
போட்டோசொப் அல்லது வீடியோ எடிட்டிங் தெரிந்த பெண்கள் விரும்பத்தக்கது.
076 583 3275
(CS 43287) (3/6)

**வேலைக்கு ஆள்கள் தேவை**
Soundar Outsource (Pvt) Ltd,
DSR (Distributor Sale Ref)
வேலைக்கு ஆள் தேவை.
யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாக கொண்டவர்கள் விரும்பத்தக்கது. சொந்த மோட்டார் சைக்கிள் இருத்தல் வேண்டும். சம்பளம் பேசித் தீர்மானிக்கபடும்.
தொடர்புகொள்ளவும்:
077 665 2694, 076 277 0015
077 003 8742
(cs 18689) (2/6)

**காணி விற்பனைக்கு உண்டு**
யாழ்ப்பாணம் நாவற்குழியில் 42 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் (நிலப்பரப்பு)
- A9 வீதியில் இருந்து 150M தூரம்
- லங்கா அசோக் லேடன் வாகனவிற்பனை நிலையத்திற்கு அருகாமையில்
- நாவற்குழி சந்தியிலிருந்து 500 M தூரம்
- யாழ். பஸ் நிலையத்திலிருந்து 8 KM தூரம்
- 18 அடிப்பாதையுடன் இயற்கை சூழல்
- நன்னீர்ச்சூழல்

தொடர்பு :
குரு - 077 6234 204, 077 2880 152, 076 6583 621,077 9116 983

**NEW SCIENCE HALL**
KANNATHIDDY JAFFNA
**2022 A/L DAY CLASS**
(2021 A/L பரீட்சைக்கு தோற்றியவர்கட்குரியது)
திங்கள் தொடக்கம் வெள்ளி வரை
நேரடி வகுப்புக்கள், நிகழ் நிலை வகுப்புக்கள்

**PHYSICS**
திரு.G.பிரபா, திரு.S.சோதிலிங்கம்:- 11.30 - 1.30 NOON

**CHEMISTRY**
திரு.S.T.உமாசங்கர், திரு.V.செல்வரஞ்சன்:- 9.30 - 11.30 AM

**BIOLOGY**
திரு.V.S.குணசீலன், திரு.T.கெங்காதரன்:- 8.00 - 9.30 AM

**COM. MATHS**
திரு.P.செந்தில்நாதன் :- 7.00 AM

ஆரம்பம்: 07.03.2022
Call: 077 791 7611, 076 566 3006, 076 569 3006
https:// facebook.com/newsciencehalljaffna

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.03.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.